©
GOVERNMENT OF TAMIL NADU
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 8.00 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 40] CHENNAI, WEDNESDAY, OCTOBER 8, 2025
Purattasi 22, Visuvaavasu, Thiruvalluvar Aandu–2056

## Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

**CONTENTS**

*Pages.*

GOVERNMENT EXAMINATIONS/EDUCATIONAL OFFICERS

Loss of Certificates .. .. .. .. .. .. .. .. .. 116

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை**

2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (விலக்கத்தீர்வு அமைப்பு முறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) (திருத்தங்கள்) ஒழுங்குமுறைவிதிகள் .. .. .. .. 116-134

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS

**GOVERNMENT EXAMINATIONS/EDUCATIONAL OFFICERS**

LOSS OF CERTIFICATES

It is hereby notified that the Original Higher Secondary Certificates / Matriculation Certificates / Diploma Certificates / School Certificates of the following pupils are reported to have been lost beyond recovery. Necessary steps are being taken to issue the duplicate of the said Certificates. If the Originals were to be found by anybody, they should be treated as invalid and sent to the Secretary, Board of Higher Secondary Examination / Directorate of Government Examinations, Chennai-6 / Director of Technical Education, Chennai-25 / Inspector / Inspectress of Matriculation and Anglo-Indian Schools as the case may be for cancellation:–

| *சி.என்.சி. எண்.* | *மாணவர்/மாணவி பெயர், பள்ளியின் பெயர் மற்றும் கல்வி மாவட்டம்.* | *பதிவு / சான்றிதழ் எண்.* | *மாதம் மற்றும் வருடம்.* | *தேர்வின் விவரம்.* | *கடித எண்ணும், தேதியும்.* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| No. VI(2)/24/2025. | | | | | |
| | Abdul Lathif, S S Government Teacher Training Institute, Samugarengapuram. | 321 12338 B/SMR | April 1988 | ஆசிரியர் கல்வி பட்டயம். | ந.க.எண். 009079/சி1/2025, 17-09-2025. |
| | Maria Chandra R St. Antonys Teacher Training Institute, Panagudi. | 12274 17275 B/SMR | April 1988 | Do. | Do. |
| | K. Kavitha, Rosammal Teacher Training Institute (W), Tuticorin, | 9870794 TT2 00229017 DTE 0318561 | June 1999 | Do. | Do. |
| | Divya R S Kevi Teacher Training Institute (W) Salem. | 0817023 DTE 941126 | June 2009 | Do. | Do. |
| | Ariharasubramanian, B (Private) | 1135147 DTE 0992115 | June 2011 | Do. | Do. |

**கே.பி. மகேஸ்வரி,**
*இணை இயக்குநர் (பணியாளர்),*
*அரசுத் தேர்வுகள் இயக்ககம்,*
*சென்னை – 600 006.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை**

**2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (விலக்கத்தீர்வு அமைப்பு முறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) (திருத்தங்கள்) ஒழுங்குமுறைவிதிகள்**

*(Lr.No.TNERC/Legal/1366/D.No.1227/2025)*

*(அறிவிக்கை எண் தமிஒஆ / வி.தீஅ மற்றும் தொ.பொ / 22 –3 தேதி 27–12–2024)*

No. VI(2)/25/2025.

2003 ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின் (மத்திய சட்டம் 36 / 2003) 86(1) மற்றும் 181(2) (zp) ஆம் பிரிவுகளுடன் சேர்த்துப்படிக்கப்படும் 32 மற்றும் 33 ஆம் பிரிவினரால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும், இதன் பொருட்டு இயல்விக்கும் அனைத்து பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆனையம், இதன் மூலம் 2019ம் ஆண்டு தமிழ்நாடு

மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (விலக்கத் தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்பான பொருட்கூறுகள்) ஒழுங்குமுறைவிதி (இனி முதன்மை ஒழுங்குமுறைவிதி என குறிப்பிடப்படும்) களில் இதன்மூலம் பின்வரும் திருத்தங்களை செய்கிறது. அதன் வரைவு மேற்சொன்ன 181ஆம் பிரிவின் (3) ஆம் உட் பிரிவின்படி வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியிடப்பட்டது.

**திருத்தங்கள்**

(i) இந்த ஒழுங்குமுறைவிதிகள் ''2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (விலக்கத்தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) (திருத்தங்கள்) ஒழுங்குமுறைவிதிகள்'' என்று வழங்கப்பெறும்.

(ii) இந்த ஒழுங்குமுறைவிதிகள் மேல்வரம்பு விலை வீதத்தை அகற்றுதல் தொடர்பான ஒழுங்குமுறைவிதி (10) ன் கூறு (அ) ன் உட்கூறுகள் (2) மற்றும் (3) யினை தவிர ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும். ஒழுங்குமுறைவிதி (10) ன் கூறு (அ) ன் உட்கூறுகள் (2) மற்றும் (3) ஆனது ஆணையத்தின் 2024 ம் ஆண்டின் 22–01–2024ம் தேதியிட்ட ஆணை எண். 1 மற்றும் 2024 ம் ஆண்டின் 13–08–2024 ம் தேதியிட்ட ப.ம. எண் 22 ன் படி இவை 01–04–2024 முதல் நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் ஒழுங்குமுறைவிதி 4 இல் திருத்தம்:**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 4 இல், உள் ஒழுங்குமுறைவிதிகள் (1) மற்றும் (2) பின்வருமாறு மாற்றப்படும்:

*''(1) இந்த ஒழுங்குமுறைவிதிகள் மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையினை பயன்படுத்தி (மாநிலங்களுக்கிடையேயான மின்சாரம் கொண்டு செல்லுதல் உட்பட) திறந்த நுழைவுரிமை வாயிலாக மின்சாரத்தை வழங்குகின்ற பரிமாற்றங்களில் தொடர்புடைய அனைத்து மின் விலைக்கு வாங்குபவர்(கள்) மற்றும் மின் விற்பனையாளர்(களு) க்கு, பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொருந்துதல் வேண்டும்;*

*(அ) இந்த ஒழுங்குமுறைவிதியின் கீழ் உள்ள விலக்கத்தீர்வு அமைப்புமுறையானது மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையம், சூரிய சக்தி உற்பத்தி நிலையம் (நிலையங்கள்) மற்றும் அரசுக்கு சொந்தமான நதி நீரோட்ட திட்டங்கள் உள்ளடங்கிய புனல் மின் உற்பத்தி நிலையம் (கள்) நீங்கலாக திறந்த நுழைவுரிமை மின் உற்பத்தி நிலையம் (நிலையங்கள்), அரசுக்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளடங்கலாக அனைத்து மின் விற்பனையாளர்களுக்கும் மற்றும்*

*(ஆ) இந்த ஒழுங்குமுறைவிதியின் கீழ் உள்ள விலக்கத்தீர்வு அமைப்புமுறையானது மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைக்கப்பட்டுள்ள மின் பகிர்மான உரிமதாரர்(கள்), உரிமம் பெற்றுள்ள மின் பகிர்மான உரிமதாரர்(கள்) மற்றும் முழு திறந்தவெளி நுழைவுரிமை மின் நுகர்வோர்களுக்கும் பொருந்துதல் வேண்டும்.*

*வரம்புரையாக இந்த ஒழுங்குமுறைவிதிகள் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட பின்பு பிந்திய நாளில் மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து திறந்தவெளி நுழைவுரிமை மின் நுகர்வோர்களுக்கும் பொருந்துதல் வேண்டும்.*

**3. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் ஒழுங்குமுறைவிதி 6 இல் திருத்தம்:**

*(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 6 இல், உள் ஒழுங்குமுறைவிதி (5) இல், சொற்றொடர் (1) ஆனது (6) என மறுஎண்ணிக்கை செய்யப்படும்.*

**4. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 7வது விதியின் திருத்தம்:**

*(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 7 இல், உள் ஒழுங்குமுறைவிதி (1), உட்பிரிவு (C) பின்வருமாறு மாற்றப்படும்:*

***''அலைவெண்ணுக்கான இயக்க இடைத் தொலைவு (Operating range for Frequency):*** *அவ்வப்போது இந்திய மின் கட்டமைப்பு விதித்தொகுப்புகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள இடைத்தொலைவிற் கிணங்க காலத்தொகுதிக்கான சராசரி மின் கட்டமைப்பு அலைவெண் இயல்பான இயக்க இடைத்தொலைவில் இருத்தல் வேண்டும். அலைவெண்ணுக்கான இயக்க இடைத்தொலைவுக்கு அப்பால் விலக்கம் ஏதும் அனுமதிக்கப்படமாட்டாது.*

***குறிப்பு:–*** *மின் கட்டமைப்பு அலைவரிசை = f மற்றும் fband = [49.90 மின்னதிர்வுகள் ≤ f ≤ 50.05 மின்னதிர்வுகள்] மற்றும் இந்த அலைவெண்ணின் அலைவரிசை இயக்க இடைத்தொலைவு இந்த ஒழுங்குமுறைவிதியில் பொருந்தக்கூடிய தருணத்தில் பொறுத்தப்படுத்தல் வேண்டும்.''*

*(ii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 7 இல், உள் ஒழுங்குமுறைவிதி (1), உட்பிரிவு (E) பின்வருமாறு மாற்றப்படும்:*

*''(E) தீர்வுக்கான கால அளவு: மாநில விலக்க ஒருங்கிணை கணக்குகளை தயார் செய்தல் மற்றும் தீர்வு செய்தல் வாராந்தர அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும், மேலும் இவை வாராந்திர அடிப்படையில் மாநில மின்சுமை பகுப்பு மைய இணையதளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும் ''*

(iii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 7 இல், உள் ஒழுங்குமுறைவிதி (1) இல், பிரிவு (I) பின்வருமாறு மாற்றப்படும்:

*''இழப்புகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஆதாரம்: திட்டமிடலின் நோக்கத்திற்காக அவ்வப்போது வெளியிடப்படும் ஆணையத்தின் மின் கட்டண வீத ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள மின்செலுத்தல் மற்றும் மின்பகிர்மான இழப்புகள் மாநிலத்திலுள்ள அந்தந்த காலத்தொகுதியில் ஒவ்வொரு உறுப்பமைவின் உள்ளபடியான மின் உள்ளீழுப்பின் படி மாநில உறுப்பமைவுகளுக்கிடையே செயல்படுத்தப்படுதல் வேண்டும்.*

*இருப்பினும் மாநில மின் சுமை பகுப்பு மையம் காலத்தொகுதி வாரியாக உள்ளபடியான மாநிலத்திற்குள்ளான மின் செலுத்தல் இழப்புகள் குறித்த கணக்குகளை பராமரித்து அதன் வலைதளத்தில் வெளியிடுதல் வேண்டும்.''*

**5. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 9வது விதியின் திருத்தம்:**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 9 இல், உள் ஒழுங்குமுறைவிதி (2) பின்வருமாறு மாற்றப்படும்:

*''(1) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின்கீழ் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அல்லது இது தொடர்பாக செய்யப்பட்ட விசாரணையில், ஏதாவது மின் விற்பனையாளர் அல்லது மின்சாரம் விலைக்குவாங்குபவர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டால், வரையறுக்கப்பட்ட சட்டம் அல்லது ஒழுங்குமுறைவிதிகளின் வேறு ஏதாவது நடவடிக்கைக்கு ஊறு பயக்காதவாறு, ஆணையம் சூதாட்டத்தில் ஈடுபட்ட காலத்திற்குடைய விலக்கத்திற்கான தண்டத்தொகையினை அத்தகைய மின் விற்பனையாளர் அல்லது மின்சாரம் விலைக்குவாங்குபவருக்கு விதிக்கலாம்.*

*(ii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 9 இல், உள் ஒழுங்குமுறைவிதி (2) மற்றும் அது தொடர்பான உள்ளீடுகளுக்குப் பிறகு, பின்வரும் உள் ஒழுங்குமுறை சேர்க்கப்படும், அதாவது:—*

*''(3) உள் ஒழுங்குமுறைவிதிகள் (1) மற்றும் (2) இருந்தபோதிலும், மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் கேட்கப்படும் போது, மின் உற்பத்தி நிறுவனம் அதன் மின் உற்பத்தி நிலையத்தின் அறிவிக்கப்பட்ட திறனை நிரூபிக்க வேண்டும். மின் உற்பத்தி நிறுவனம் அறிவிக்கப்பட்ட திறனை நிரூபிக்கத் தவறும் நிலையில், உள் ஒழுங்குமுறைவிதி (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஆணையத்தின் முன் பொருத்தமான மனுவை தாக்கல் செய்வதன் மூலம் மாநில மின்சுமை பகுப்பு மையம் அத்தகைய மின் உற்பத்தி நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கைகளைத் தொடங்கலாம்.''*

**6. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 10வது ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்:**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 10 இல், கூறு (A) ன், உட்கூறு (1) பின்வருமாறு மாற்றியமைக்கப்படும் :

*''இந்த ஒழுங்குமுறைவிதிகளின் பின் இணைப்பு—1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு விலக்கக் கட்டணங்களுக்கான நெறிய விலையினை கருத்தில் கொண்டும் இந்த ஒழுங்குமுறைவிதியின் (2) முதல் (7) வரையிலான கூறுகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு மாநில உறுப்பமைவுகளான மின் விலைக்குவாங்குபவரின் மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் குறைவான மின் உட்செலுத்தல் மற்றும் மின் விலைக்கு வாங்குபவரின் குறைவான உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பானையாளரின் மிகை மின் உட்செலுத்தல் ஆகியவைகளுக்கான விலக்குக் கட்டணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு காலத் தொகுதி அளவின் சராசரி அலைவெண்ணின்படி கணக்கிடப்படுதல் வேண்டும்.*

*வரம்புரையாக மின்விற்பனையாளர் மற்றும் மின் விலைக்கு வாங்குபவர் ஒவ்வொரு காலத்தொகுதிற்குள்ள திட்டமிடலினை கடைபிடித்தல் வேண்டும் மற்றும் எத்தகைய விலக்கமும் தொடர்ச்சியான 6 காலத் தொகுதிக்கு மிகாமல் இருத்தல் வேண்டும் அதாவது விலக்க அறிகுறியின் மாறுதல் ஒவ்வொரு 6 காலத் தொகுதிக்கு ஒருமுறை செய்யப்படுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் தொடர்ச்சியான மீறல் கால அளவிற்கு, அதாவது 7வது காலத்தொகுதியிலிருந்து, பொருந்தக்கூடிய விலக்கக் கட்டணங்களில் 20 விழுக்காடு வீதத்தில் கூடுதல் கட்டணங்கள் விதிக்கப்படுதல் வேண்டும்.*

*மேலும் வரம்புரையாக மேற்சொன்னவாறு குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் கட்டணங்கள் மின் விற்பானையாளர்(கள்) / மின் விலைக்குவாங்குபவர்(களின்) அத்தகைய தவறுகைக்கான கூடுதல் கட்டணங்கள் ஆணையத்தால் தனியாக அறிவிக்கை செய்யப்படவிருக்கும் நாளிலிருந்து பொருந்துதல் வேண்டும்.''*

(ii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 10 ன் கூறு (A) ல், உட்கூறுகள் (2) மற்றும் (3) நீக்கப்படும்.

(iii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 10 இல், கூறு (A) ல், உட்கூறு(9) பின்வருமாறு மாற்றியமைக்கப்படும்:

''வணிகரீதியான தொடக்க நாளுக்கு முன்னர், மின்கட்டமைப்பில் உட்செலுத்தப்பட்ட நிலையற்ற மின்சாரத்திற்குரிய விலக்கக்கட்டணங்கள் பூஜ்யம் என கணக்கிடப்படும்''

**7. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 11வது விதியின் திருத்தம்:**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், உட்கூறு (A) இன் ஒழுங்குமுறைவிதி பின்வருமாறு மாற்றப்படும்:

*''வரம்புரையாக ஒரு நாளின் திட்டமிட்டவற்றிலிருந்தான மொத்த விலக்கு மின் உள்ளிழுப்பு செய்கின்ற உறுப்பமைவுகளின் மொத்த திட்டமிடப்பட்ட அளவிலிருந்து 3 விழுக்காட்டிற்கு மிகுதியாக இருத்தல் கூடாது மற்றும் மேற்குறிப்பிட்ட மின் உற்பத்தியாளர்களுக்கு 1 விழுக்காடு மற்றும் ஒரு நாள் அடிப்படையிலான கொடுக்கப்பட வேண்டிய/பெறப்படவேண்டிய விலக்கத்தீர்வு கட்டணங்களில் இத்தகைய பிறல்களுக்கு 20 விழுக்காடு பொருந்துதல் வேண்டும் மற்றும் ஒழுங்குமுறைவிதி 9ன் உள் ஒழுங்குமுறைவிதி 2ன் குறித்துரைக்கப்பட்டவாறு இந்த கூடுதல் கட்டணங்கள் சூதாட்டத்தில் ஈடுபடுதலுக்கான தண்டத்தொகையுடன் சேர்த்து கணக்கிடப்படும் .*

(ii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், உட்கூறு (B) இன் ஒழுங்குமுறைவிதி பின்வருமாறு மாற்றப்படும்:

*''வரம்புரையாக மின் கட்டமைப்பின் அலைவெண் ''49.90 மின்னதிர்வுகளுக்குகீழ்'' இருக்கும்போது மின் விலைக்கு வாங்குபவரால் மிகைமின் உள்ளிழுப்பு செய்யவோ மற்றும் மின் விற்பனையாளரின் குறைவாக மின் உட்செலுத்தல் செய்யவோ அனுமதிக்கப் படமாட்டாது மற்றும் மின் கட்டமைப்பு அலைவெண் ''50.05 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும்'' இருக்கும்போது*

*மின் விலைக்குவாங்குபவரால் குறைவாக மின் உள்ளிழுப்பு செய்யவோ மற்றும் மின் விற்பனையாளரின் மிகை மின் உட் செலுத்தல் செய்யவோ அனுமதிக்கப்படமாட்டாது.''*

(iii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், கூறு (D) பின்வருமாறு மாற்றப்படும்:

*''காலத் தொகுதியின் சராசரி மின் கட்டமைப்பு அலைவெண் ''49.90 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மிகுதியாக இருக்கும்போது, ஒவ்வொறு காலத் தொகுதியிலும் இந்த ஒழுங்குமுறைவிதியின் (B) கூறு மற்றும் (C) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான மிகையான கொள்ளளவு எல்லைக்கு இந்த ஒழுங்குமுறைவிதியின் 10 ஆம் ஒழுங்குமுறை விதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலக்கத்திற்கான கட்டணங்களுடன் மிகுதியான மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தலுக்கான இந்த ஒழுங்குமுறைவிதியின் (M) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையியலுக் கிணங்க பின் இணைப்பு II இன் அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்களில் விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் பொருந்துதல் வேண்டும்.''*

(iv) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், கூறு (E) பின்வருமாறு மாற்றப்படும்:

*''எரிபொருள் ஆதாரத்தினை பொருட்படுத்தாமலே குறைவான மின் உட்செலுத்தலின் விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம், அத்தகைய மின் உற்பத்தி நிலையத்தின் மின் கட்டண வீதம் ஆணையத்தால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டோ அல்லது இல்லாது இருப்பினும் அனைத்து வகையிலான மின் விற்பானையாளர்களுக்கு சமமாக இருத்தல் வேண்டும்;''*

(v) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், கூறு (L) க்கான நிபந்தனை கூறு நீக்கப்படும்.

(vi) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், கூறு (M) பின்வருமாறு மாற்றப்படும்:

*''இந்த ஒழுங்குமுறைவிதியின் (B) பற்றும் (C) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு மின் கட்டமைப்பின் அலைவெண் ''49.90 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும்'' இருக்கும்போது ஒவ்வொரு காலத் தொகுதியிலும் கொள்ளளவு வரம்பிற்கு மிகையான மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் இந்த ஒழுங்குமுறைவிதியின் இணைப்பு—IIன் அட்டவணை—Iல் குறிப்பிடப்பட்டவாறு விதிக்கப்படும். இந்த கட்டணம் விலக்க கட்டணங்களுடன் கூடுதலாக இந்த ஒழுங்குமுறைவிதியின் இணைப்பு—I மற்றும் III ல் குறிப்பிட்டவாறு விதிக்கப்படும்.''*

(vii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், கூறு (N) பின்வருமாறு மாற்றப்படும்:

*''மின் கட்டமைப்பின் அலைவெண் ''49.90 மின்னதிர்வுகளுக்கு குறைவாக'' இருக்கும்போது ஒவ்வொரு காலத் தொகுதிக்கான மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும். இது மின் விலைக்கு வாங்குபவர்கள் மற்றும் மின் விற்பனையாளர்களின் மின் கட்டமைப்பின் ஒழுங்கின் மீதான நடத்தையினை கருத்திற்கொண்டு காலத் தொகுதியின் சராசரி மின் கட்டமைப்பு அலைவெண்ணுக்கு தொடர்பான விலக்கக் கட்டணங்களின் விழுக்காடாக இருக்க வேண்டும்.''*

(viii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், கூறு (O) நீக்கப்படும்.

(ix) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், கூறு (Q) பின்வருமாறு மாற்றப்படும்:

*''ஆணையத்தால் தனியாக அறிவிக்கப்படும் இந்த திருத்தம் அறிவிக்கை செய்யப்படவிருக்கும் நாளிலிருந்து அடையாள மாற்ற நிபந்தன மீறலுக்கு ஒரு நாளின் ஒவ்வொரு மீறலுக்கும், செலுத்தப்படவேண்டிய / பெறப்படவேண்டிய நாளொன்றின் அடிப்படை விலக்க கட்டண அமைப்புமுறையின்படி பொருந்தக்கூடிய விலக்க கட்டணத்தில் 20 சதவிகிதம் மீறலுக்கான கூடுதல் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். ''*

*''உதாரணமாக ஒவ்வொரு ஆறு காலத் தொகுதிக்கும் பிறகு குறைந்த அளவு ஒருமுறை அடையாள மாற்றம் நடைபெற வேண்டும். அவ்வாறாக t1 காலத் தொகுதியிலிருந்து ஆரம்பமாகும் உறுப்பமைவு t6 காலத் தொகுதிக்கு பின்னர் அடையாள மாற்றம் செய்தல் வேண்டும். t7 காலத் தொகுதியில் உடனடியாக அடையாள மாற்றம் நடைபெறாமல் t8 காலத் தொகுதியிலிருந்து t12 காலத் தொகுதிவரையிலும் நடைபெறுமானால், ஒரு மீறலுக்கு சமமான கூடுதல் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். t12 காலத் தொகுதிக்கு பின்னர், அதாவது t13 கால தொகுதியில், உடனடியாக அடையாள மாற்றம் நடைபெறாமல், t14 காலத் தொகுதியிலிருந்து t18 காலத் தொகுதிவரையிலும் நடைபெறும் நேர்வில் இரண்டு மீறல்களுக்கு சமமான கூடுதல் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும்.''*

(x) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 11 இல், கூறு (T) பின்வருமாறு மாற்றப்படும்:

''ஒவ்வொரு மின் விலைக்குவாங்குபவரும் மற்றும் மின் விற்பனைசெய்பவரும் மிகை மின் உள்ளிழுப்பு/குறைவான மின் உட்செலுத்தல் அளவுகளை குறிப்பிட்டு அவைகளுக்கு ஒத்திசைவாக ஒவ்வொரு மின் விலைக்குவாங்குபவரும் மின் விற்பனையாளரும் வாராந்தர அடிப்படையில் தனித்தனியாக செலுத்த வேண்டிய/பெறவேண்டிய விலக்கக் கட்டண விவரங்களை மாநில மின்சுமை பகுப்பு மையம் தயார் செய்து அதனுடைய வலைதளத்தில் விலக்கக் கணக்குகளுக்கான பதிவுருக்களை வெளியிடுதல் வேண்டும். ''

**8. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 13வது விதியின் திருத்தம்:**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 13 இல், உள் ஒழுங்குமுறைவிதி (2) இல், கூறு (iii) பின்வருமாறு மாற்றப்படும்:

*''மாநில உறுப்பமைவுகள் பொருந்தக்கூடிய சட்டப்படியான வரிகள் (levies) ஏதேனும் இருப்பின் செலுத்துவதற்கான சட்டப்படியான தேவைகளுக்கு இணங்குதல் வேண்டும். ''*

**9. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 14வது ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்:**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், ஒழுங்குமுறைவிதி 14 இல், உள் ஒழுங்குமுறைவிதி (2) பின்வருமாறு மாற்றப்படும்:

*"கூடுதல் கட்டணங்கள் உட்பட விலக்கங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் இரண்டு நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் இருக்குமானால் அதாவது மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் பட்டியல் வெளியிடப்பட்ட பன்னிரெண்டு (12) நாட்களுக்கு அப்பால், செலுத்தத் தவறிய உறுப்பமைவு தாமதமான ஒவ்வொரு நாளுக்கும் 0.06 விழுக்காடு வீதத்தில் தனி வட்டி செலுத்த வேண்டும் மற்றும் மாநில மின்சுமை பகுப்பு மையத்திலிருந்து செலுத்தத் தவறியதென்ற அறிவிப்பு பெறப்பட்டவுடன், அதனை செலுத்தத் தவறிய உறுப்பமைவரின் மின் நுகர்வு பட்டியலில் சேர்க்கப்படும் முறை இருப்பின் உரிமதாரரால் சேர்க்கப்படும். இது சட்டத்தின் 56 ஆம்பிரிவுமற்றும் பிற தொடர்புடைய ஒழுங்குமுறைவிதியின்கீழ் எடுக்கப்படலாகும் நடவடிக்கை உள்ளடங்கலாக சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் எடுக்கப்படலாகும் நடவடிக்கைக்கு ஊறு பயக்காதவாறு எடுக்கப்படும் நடவடிக்கை ஆகும்."*

**10. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் இணைப்பு–I இல் திருத்தம்:**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், இணைப்பு–I இல், கூறு (1) பின்வருமாறு மாற்றப்படும்:

*"1) இந்த ஒழுங்குமுறைவிதிகளின் 10 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (A) உள் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப் பட்டுள்ளவாறு, மாநில உறுப்பமைவுகளான மின் விலைக்குவாங்குபவரின். அனைத்து காலத் தொகுதிக்குமான மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் மிகை மின் உட்செலுத்தலுக்கான விலக்கக் கட்டணங்கள் கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் மின் விலைக்குவாங்குபவரின் குறைவான மின் உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் மிகை மின் உட்செலுத்தலுக்கான விலக்கங்களுக்கான கட்டணங்கள் பெறப்படுதல் வேண்டும் மற்றும் விலக்கக் கட்டணங்களுக்கான நெறிய விலையினை கருத்திற்கொண்டு ஒரு காலத் தொகுதியின் சராசரி அலைவெண்ணின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு கணக்கிடப்படுதல் வேண்டும். "*

| *காலத்தொகுதியின் சராசரி அதிர்வெண் (மின்னதிர்வுகள்)* | | *விலக்கங்களுக்கான கட்டணங்கள்* |
|---|---|---|
| *குறைவாக* | *குறைவில்லாத* | *(பைசா / யூனிட்)* |
| | *50.05* | *0.0* |
| *50.05* | *50.04* | *50.05 மின்னதிர்வுகளுக்கு குறைவில்லாத நிலையின் மதிப்பளவு மற்றும் 50.00 மின்னதிர்வு நிலையில் அடையாளம் காணப்பட்ட மதிப்பளவோடு இணைத்து மற்றும் இந்த ஒழுங்குமுறை விதியின்கீழ் கண்டுள்ள குறிப்பின்கீழ் விவரித்தவாறு சரிவு நிர்ணயிக்கப்படுகிறது.* |
| *50.04* | *50.03* | |
| *50.03* | *50.02* | |
| *50.02* | *50.01* | |
| *50.01* | *50.00* | *இதில் P என்பது ஒரு நாளைக்கு முந்திய அனைத்து சந்தைகளின் மின் பரிமாற்ற பிரிவில் ஒரு யூனிட் க்கு பைசாவில் கண்டறியப்பட்ட பகுதிக்கான எடையிடப்பட்ட சராசரி கூட்டு தீர்வு செய்யப்பட்ட மதிப்பு* |
| *50.00* | *49.99* | *50.00 மின்னதிர்வில் அடையாளம் காணப்பட்ட மதிப்பினை 49.90 மின்னதிர்வுக்கு குறைவான நிலையின் மதிப்பினோடு இணைத்து மற்றும் இந்த ஒழுங்குமுறை விதியின்கீழ் கண்டுள்ள குறிப்பின்கீழ் விவரித்தவாறு சரிவு நிர்ணயிக்கப்படுகிறது.* |
| *49.99* | *49.98* | |
| *49.98* | *49.97* | |
| *49.97* | *49.96* | |
| *49.96* | *49.95* | |
| *49.95* | *49.94* | |
| *49.94* | *49.93* | |
| *49.93* | *49.92* | |
| *49.92* | *49.91* | |
| *49.91* | *49.90* | |
| *49.90* | | *1000.00* |

(ii) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், இணைப்பு–I இல், கூறு (1) இல், உட்கூறு (vi) நீக்கப்படும்.

**11. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் இணைப்பு–II க்கு திருத்தம்:**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், இணைப்பு–II இல், அட்டவணை–II நீக்கப்படும்.

**12. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் இணைப்பு–III க்கு திருத்தம்:**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், இணைப்பு–III பின்வருமாறு மாற்றப்படும்:

*" விலக்கத்தீர்வு அமைப்புமுறை நெறிய விலைக்கான எடுத்துக்காட்டு :*

| *காலத்தொகுதியின் சராசரி அதிர்வெண் (மின்னதிர்வுகள்)* | | *விலக்கங்களுக்கான கட்டணங்கள் (பைசா/யூனிட் )* |
|---|---|---|
| *குறைவாக* | *குறைவில்லாத* | |
| | *50.05* | *0.00* |
| *50.05* | *50.04* | *1 X P/5* |
| *50.04* | *50.03* | *2 X P/5* |
| *50.03* | *50.02* | *3 X P/5* |
| *50.02* | *50.01* | *4 X P/5* |
| *50.01* | *50.00* | *P* |
| *50.00* | *49.99* | *90.909 + 10 X P/11* |
| *49.99* | *49.98* | *181.818 + 9 X P/11* |
| *49.98* | *49.97* | *272.727 + 8 X P/11* |
| *49.97* | *49.96* | *363.636 + 7 X P/11* |
| *49.96* | *49.95* | *454.545 + 6 X P/11* |
| *49.95* | *49.94* | *545.454 + 5 X P/11* |
| *49.94* | *49.93* | *636.363 + 4 X P/11* |
| *49.93* | *49.92* | *727.272 + 3 X P/11* |
| *49.92* | *49.91* | *818.181 + 2 X P/11* |
| *49.91* | *49.90* | *909.090 + 1 X P/11* |
| *49.90* | | *1000.00* |

*இதில் P என்பது ஒரு நாளைக்கு முந்திய அனைத்து சந்தைகளின் மின் பரிமாற்ற பிரிவில் ஒரு யூனிட் க்கு பைசாவில் கண்டறியப்பட்ட பகுதிக்கான எடையிடப்பட்ட சராசரி கூட்டு தீர்வு செய்யப்பட்ட மதிப்பு*

**13. பொதுத் திருத்தங்கள்:**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளில், "49.85 Hz " என்ற சொற்றொடர் எங்கு ஏற்பட்டாலும், "49.90 Hz " என்ற சொற்றொடர் மாற்றப்படும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவின்படி)

சென்னை-600 032,
2025 செப்டம்பர் 16.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**விளக்க அறிக்கை**

1. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (விலக்கத்தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) விதிமுறைகள், 2019 ஆணையத்தால் 01-03-2019 தேதியிட்ட அறிவிக்கை எண் தமிஒஆ / வி.தீ.செ. மற்றும் தொ.பொ / 21 - 1 மூலம் அறிவிக்கப்பட்டு அது ***தமிழ்நாடு அரசிதழில்*** 20-03-2019 அன்று வெளியிடப்பட்டது. இந்த ஒழுங்குமுறைவிதியின் முழு நோக்கமும், மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையில் இணைக்கப்பட்ட மின் விற்பனையாளர்கள் (மரபு முறை மின் உற்பத்தியாளர்கள்) மற்றும் மின் விலைக்குவாங்குபவர்கள் (மின் பகிர்மான உரிமதாரரின் நேரடி வாடிக்கையாளர்கள் தவிர்த்து (பகுதி மற்றும் முழு திறந்த நுழைவுரிமை நுகர்வோர் உட்பட)) மின் கட்டமைப்பில் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான உள்ளிழுத்தல்களில் ஒழுங்கினை கடைபிடிப்பதாகும்.

2. அதிகரித்து வரும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (RE) ஊடுருவல் மற்றும் அத்தகைய மின் உற்பத்தியின் நிச்சயமற்ற தன்மை மற்றும் மின்சாரத் தேவையின் நிச்சயமற்ற தன்மை ஆகியவை மின் அமைப்பின் நிலைத்தன்மையை உறுதி செய்வதில் முக்கிய சவாலாக உள்ளது. மின் அமைப்பின் நிலைத்தன்மை இரண்டு முக்கியமான மற்றும் மாறுபடும் அளவுருக்களால் தாக்கத்தை ஏற்படுத்துகிறது — (i) கணினி அதிர்வெண் மற்றும் (ii) சந்தை விலைகள்.

3. மின் அமைப்பின் சமநிலையற்ற தன்மையை குறைப்பதற்குத் தகுந்த குறியீடாக அமைந்து, மின் அமைப்பின் நிலைத்தன்மையை உறுதிசெய்யும் பொருட்டு விலக்கத் தீர்வு செயல்முறை நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில், விலகல்களுக்கான தண்டத்தொகையினை விதித்து கொண்டுவரப்பட்ட தற்போதைய திருத்தங்கள், மின் பகிர்மான உரிமதாரர் பல்வேறு நிலைகளில் குறிப்பாக மின்னளவியின் மின்னாற்றல் தரவை தொடர்புகொள்வதிலும் பரிமாற்றத்திலும் தயாராக இல்லாத காரணத்தால் இந்த ஒழுங்குமுறைவிதி அறிவிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு நடைமுறைபடுத்தப்பட வேண்டியவை,

01–04–2024 அன்று தான் நடைமுறைப்படுத்தப்பட்டது. 22–01–2024 தேதியிட்ட 2024 ஆம் ஆண்டின் ஆணை எண். 1 இன் படி இது தொடர்பாக ஆணையத்தால் தேவையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

4. இதற்கிடையில், தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் தாக்கல் செய்யப்பட்ட 2024 இன் ப.ம.எண்.22 ல், சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து ஆணையம் பின்வரும் உத்தரவுகளை இடைநிலையில் 13–08–2024 தேதியில் பிறப்பித்துள்ளது:

*“........................... 2.7.2. இந்த ஒழுங்குமுறைவிதிகள் மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையினை பயன்படுத்தி (மாநிலங்களுக்கிடையேயான மின்சாரம் கொண்டு செல்லுதல் உட்பட) குறுகிய கால திறந்த நுழைவுரிமை அல்லது நடுத்தர கால திறந்த நுழைவுரிமை அல்லது நீண்ட கால திறந்த நுழைவுரிமை வாயிலாக மின்சாரத்தை பரிமாற்றங்கள் வழங்குகின்ற அணைத்து மின் உற்பத்தியாளர்களுக்கு தமிஒஆ (விலக்கத் தீர்வு செயல்முறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) விதிமுறைகள், 2019 இன் படி விலகலுக்கான கட்டணங்கள் பொருந்துதல் வேண்டும்; எனினும், தமிஒஆ (விலக்கத் தீர்வு செயல்முறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) விதிமுறைகள், 2019 இன் ஒழுங்குமுறைவிதி 10(A)(2) மற்றும் 10(A)(3) ஒழுங்குமுறைவிதிகளில் பரிந்துரைக்கப்பட்ட மேல்வரம்பு விலை வீதம் நீக்கப்பட்டு, அதற்குரிய திருத்தம் ஆணையத்தால் உரிய நேரத்தில் வெளியிடப்படும்.”*

5. மேற்கூறிய உத்தரவைக் கருத்தில் கொண்டு, அனைத்து பங்குதாரர்களின் நலனையும் கருத்தில் கொண்டும், மின் கட்டமைப்பின் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையுடன் கூடிய செயல்பாட்டைக் கருத்தில் கொண்டும் இந்தத் திருத்தம் முறையாக வெளியிடப்படுகிறது. 2002–2003 ஆண்டுகளில் நாடுமுழுவதும் கிடைப்பு சார்ந்த கட்டணவீதம் (ABT) படிப்படியாக செயல்படுத்திய பிறகு மின் கட்டமைப்பு விலகல் / பாதிப்பு வெகுவாகக் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல், மாநிலங்களுக்கு இடையேயான விலக்கத்தீர்வு செயல்முறை (மாநிலங்களுக்கு இடையேயான கிடைக்கக்கூடியது அடிப்படையிலான மின்கட்டண ஆணை (ABT) இன் மாற்றியமைக்கப்பட்ட பதிப்பு) மாநில மின்கட்டமைப்பின் சிறந்த செயல்திறனுக்கு உதவும். விலக்கத் தீர்வு அமைப்புமுறை (DSM) ஐ சந்தை விலையுடன் இணைப்பதன் மூலம், மின்கட்டமைப்பில் அதிக ஒழுக்கம் அமைவதோடு அலைவெண்ணின் அலைவரிசை இயக்க இடைத்தொலைவினை குறைக்க முடியும்.

6. மேலும், மின்பகிர்மான உரிமதரர் மற்றும் மற்ற பங்குதாரர்கள் குறிப்பாக மின்நுகர்வோர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, 2019ம் ஆண்டின் த.மி.ஒ.ஆ.(விலக்கத் தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறைவிதிகள் 10(A)(2) மற்றும் 10(A)(3) ல் குறிப்பிடப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் விலகலுக்கான மேல்வரம்பு விலை வீதத்தை நீக்குவது அவசியம். விலக்கத் தீர்வு அமைப்புமுறை (DSM ) பொருட்கூறுகள் பணி நிறுவனத்தின் உச்ச மின் தேவையை குறைக்க உதவியதோடு, மின் உற்பத்தி, மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மான கட்டமைப்பில் அதிக முதலீடுகளை தள்ளிப்போடவும் உதவுகிறது. இந்தத் திருத்தங்களை இறுதி செய்வதற்கான ஆணையத்தின் முடிவுகளுக்கான காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

a. மின்பகிர்மான நிறுவனங்கள் மண்டல ஒருங்கிணைப்பு கணக்கில் மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் விலகல்களுக்கான கட்டணங்களை செலுத்துகிறது, இது த.மி.ஒ.ஆ. (விலக்கத் தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) விதிமுறைகள், 2019 இன் ஒழுங்குமுறைவிதி 10(A)(2) மற்றும் 10(A)(3) இல் பரிந்துரைக்கப்பட்ட மேல்வரம்பு விகிதத்துடன் பொருந்தாது, அதாவது 311 பைசா/யூனிட் (ஆணையம் கட்டணத்தை தீர்மானிக்கும் மின் உற்பத்தி நிலையங்கள்) மற்றும் 303.04 பைசா/யூனிட் (ஆணையம் கட்டணத்தை தீர்மானிக்காத உற்பத்தி நிலையங்கள்). மின் உற்பத்தியாளர்கள் உச்சவிகிதத்தை மட்டுமே செலுத்தவதினால், மின்பகிர்மான நிறுவனங்கள் மாநில அளவிலான விழாக்களுக்கு செலுத்தும் கட்டணங்கள் மற்றும் மாநில மின் உற்பத்தியாளர்களிடம் மின் பகிர்மான நிறுவனம் பெரும் விலகல் கட்டணத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை மின் பகிர்மான நிறுவனமே ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையில், அவை மின் கட்டண உயர்வாக பொதுவான மின் நுகர்வோரின் தலையின்மேல் சுமத்தப்படுகிறது.

b. ‘‘சூதாட்டம்’’ என்பதன் பொருள் வரையறையானது, திட்டமிடலில் ‘‘உள்நோக்கத்தோடு அறிவித்தல் ‘‘ க்கான அடிப்படை காரணத்தை தெளிவாக மதிப்பிடுவதாகும். விலகல் கட்டணத்தில் மேல்வரம்பு இருந்ததால் மின் உற்பத்தியாளர்கள் தங்களது கிடைக்கக்கூடிய மின் திறன் அளவை தவிர்த்து குறைவாக மின் உள்ளீடு செலுத்தி சூதாட்டத்தில் ஈடுபட வாய்ப்புள்ளதால் மற்றும் மின் நுகர்வோர் குறிப்பாக தன்பயன் நுகர்வோர் தங்களது மின் பயனீட்டினை கிடைக்கக்கூடிய மின் திறன் அளவிற்கு சரிசெய்து பயனடையும் வாய்ப்புள்ளதால் (மின் உற்பத்தியாளர்கள் தங்களது கிடைக்கக்கூடிய மின் திறன் அளவை விட குறைவாக மின் உள்ளீடு அளவை செலுத்திய நிலையில்) மாநில ஒருங்கிணை விலக்க கணக்கு தொகையில் தகுதிக்கு மேற்பட்ட வணிக இலாபம் பெறுவார்கள். இதனால் மின் உற்பத்தியாளர்களின் விலகல் மேல்வரம்பு நீக்கப்பட்டது. மேலும் மாநிலங்களுக்கிடையிலான மின் பரிமாற்றங்களுக்கு மின் உற்பத்தியாளருக்கு விலகல் கட்டணம் விதிப்பதற்கான மேல்வரம்பு இல்லை.

7. 20–02–2024 தேதியிட்ட 2024 ஆம் ஆண்டின் 1–1 ஆம் எண் உத்தரவில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) இன் நீர் தேக்க புனல் மின் நிலையம் உள்ளிட்ட புனல் மின் உற்பத்தி நிலையங்களை, 2019 ம் ஆண்டின் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட விலக்கத்தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள் ஒழுங்குமுறைவிதிகளின் படி, விலக்கல் தீர்வு அமைப்புமுறையிலிருந்து விலக்கு அளித்துள்ளது. ஏனெனில் புனல் மின் உற்பத்தி நிலையங்கள் நீர் பாசனத்துடன் இணைக்கப்பட்டு, சுழலும் இருப்புப் பகுதியாகப் பயன்படுத்தப்பட்டு, மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் (SLDC) வழிகாட்டுதல்களின்படி முழுமையாக இயக்கப்படுகின்றன. அதன்படி, இந்தத் திருத்தம் விலக்கத் தீர்வு அமைப்புமுறையின் கீழ் இயங்கும் நதி நீர் திட்டங்கள் உட்பட புனல் மின் உற்பத்தி நிலையங்களை விலக்குகிறது.

8. தமிழ்நாடு மின்சார மின் கட்டமைப்புக் குறியீட்டில் கருதப்படுகிறவாறு மின்கட்டமைப்பில் மின் உள்ளிழுத்தல் மற்றும் உட்செலுத்துதல் ஆகியவற்றில் ஈடுபடும் மின்பயனீட்டாளர்களின் விலக்கத் தீர்வுக்கான வணிக ரீதியாக அமைப்பு முறை மூலமாக மின் கட்டமைப்பின் நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பினை பேணுவததே இந்தத் திருத்தங்களின் நோக்கம். மேலும், மின் சந்தையில் சமீபத்திய முன்னேற்றங்களுடன் ஒத்துப்போகும் வகையில் மாநில மின் கட்டமைப்புக் குறியீட்டை திருத்தும் பணியில் ஆணையம் ஈடுபட்டுள்ளது.

9. மனு எண். 04/சும/2023 (suo–Motu) இல் 31–03–2023 தேதியிட்ட ம.மி.ஒ.ஆ. உத்தரவின்படி, 50.00 மின்னதிர்வில் நாளுக்கு முன்னதாக (DAM) மின்சார சந்தை பிரிவில் கண்டறியப்பட்ட தினசரி சராசரி தீர்வு விலை (ACP) க்கு பொருந்தக்கூடிய

அதிகபட்ச உச்சவரம்பு ரூ.10/யூனிட் ஆகும். அதன்படி, தினசரி சராசரி தீர்வு விலை (ACP) ரூ.8/யூனிட்டிலிருந்து ரூ.10/யூனிட்டாக திருத்தப்பட்டு இணைப்பு–III இல் விலக்கத்தீர்வு செயல்முறை விலை திசையன் மாற்றப்பட்டுள்ளது.

10. தமிழ்நாட்டில் இந்த ஒழுங்குமுறைவிதிகளை அமல்படுத்திய பின் ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில், அனைத்து பங்குதாரர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்த பின்னர், ம.மி.ஒ.ஆ. (விலக்கத்தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) விதிமுறைகள், 2024 வுடன் ஒத்துப்போகும் வகையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (விலக்கத்தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) விதிமுறைகள், 2019 ஐ தேவைப்படும்போது ஆணையத்தால் முறையாக மதிப்பாய்வு மேற்கொள்ளப்படும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவின்படி)

சென்னை–600 032,
2025 செப்டம்பர் 16.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**இருந்துவரும் வகைமுறை மற்றும் திருத்தப்பட்ட வகைமுறை களைக் காட்டும் பட்டியல்**

2019ம் ஆண்டின் த.மி.ஒ.ஆ. (விலக்கத்தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறைவிதிகளில் திருத்தம்

| *வ. எண்.* | *இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி* | *திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி* |
|---|---|---|
| 1. | **1.** சிறுதலைப்பு மற்றும் தொடக்கம்<br><br>**1.** xxx<br><br>(2) இந்த ஒழுங்குமுறைவிதிகளில் வணிக ஏற்பாடுகள், விலக்கக் கட்டணங்கள் மற்றும் தண்டத் தொகை தொடர்பான வகைமுறைகள் தவிர இந்த ஒழுங்குமுறை விதிகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்:<br><br>வரம்புரையாக வணிக ஏற்பாடுகள் மற்றும் விலக்கக் கட்டணங்கள் மற்றும் விலக்கத் தீர்வுக்கான கூடுதல் கட்டணம் மற்றும் தண்ட நடவடிக்கைகள் தொடர்பான வகைமுறைகள் ஏதாவது இருப்பின், அவை இந்த ஒழுங்குமுறைவிதிகளின் தொடக்க நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் நடைமுறைக்கு வருதல் வேண்டும். | **1.** சிறுதலைப்பு மற்றும் தொடக்கம்<br><br>**1.** xxx<br><br>(2) இந்த ஒழுங்குமுறைவிதிகள் மேல்வரம்பு விலை வீதத்தை அகற்றுதல் தொடர்பான ஒழுங்குமுறைவிதி (10) ன் கூறு (அ) ன் உட்கூறுகள் (2) மற்றும் (3) யினை தவிர தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும். ஒழுங்குமுறைவிதி (10) ன் கூறு (அ) ன் உட்கூறுகள் (2) மற்றும் (3) ஆனது ஆணையத்தின் 2024 ம் ஆண்டின் 22–01–2024ம் தேதியிட்ட ஆணை எண் 1 மற்றும் 2024 ம் ஆண்டின் 13–08–2024 ம் தேதியிட்ட ப.ம. எண் 22 ன் படி இவை 01–04–2024 முதல் நடைமுறைக்கு வரும். |
| 2 | **4. பொருந்துகை**<br><br>(1) இந்த ஒழுங்குமுறைவிதிகள் மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையினை பயன்படுத்தி (மாநிலங்களுக்கிடையேயான மின்சாரம் கொண்டு செல்லுதல் உட்பட) குறுகிய கால திறந்த நுழைவுரிமை அல்லது நடுத்தர கால திறந்த நுழைவுரிமை அல்லது நீண்ட கால திறந்த நுழைவுரிமை வாயிலாக மின்சாரத்தை வழங்குகின்ற பரிமாற்றங்களுக்கு பொருந்துதல் வேண்டும்;<br><br>(2) மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மற்றும் சூரிய சக்தி உற்பத்தி நிலையம் (நிலையங்கள்) நீங்கலாக திறந்த நுழைவுரிமை மின் உற்பத்தி நிலையம் (நிலையங்கள்), மின்பகிர்மான உரிமதாரர்களின் மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளடங்கலாக (a) அனைத்து மின் விற்பனையாளர்களுக்கும்) மற்றும் (b) மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறையுடன் அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைந்துள்ள முழுமையான திறந்த நுழைவுரிமை நுகர்வோர்கள், பகுதியளவான (partial) திறந்த நுழைவுரிமை நுகர்வோர்கள் நீங்கலாக அனைத்து மின் விலைக்கு வாங்குபவர்களுக்கும் இந்த ஒழுங்குமுறைவிதிகள் பொருந்துதல் வேண்டும். | **4. பொருந்துகை**<br><br>(1) இந்த ஒழுங்குமுறைவிதிகள் மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையினை பயன்படுத்தி (மாநிலங்களுக்கிடையேயான மின்சாரம் கொண்டு செல்லுதல் உட்பட) திறந்த நுழைவுரிமை வாயிலாக மின்சாரத்தை வழங்குகின்ற பரிமாற்றங்களில் தொடர்புடைய அனைத்து மின் விலைக்கு வாங்குபவர்(கள்) மற்றும் மின் விற்பனையாளர்(களு) க்கு, பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொருந்துதல் வேண்டும்;<br><br>(a) இந்த ஒழுங்குமுறைவிதியின் கீழ் உள்ள விலக்கத்தீர்வு அமைப்புமுறையானது மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையம், சூரிய சக்தி உற்பத்தி நிலையம் (நிலையங்கள்) மற்றும் அரசுக்கு சொந்தமான நதி நீரோட்ட திட்டங்கள் உள்ளடங்கிய புனல் மின் உற்பத்தி நிலையம் (கள்) நீங்கலாக திறந்த நுழைவுரிமை மின் உற்பத்தி நிலையம் (நிலையங்கள்), அரசுக்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளடங்கலாக (a) அனைத்து மின் விற்பனையாளர்களுக்கும் மற்றும்<br><br>(b) இந்த ஒழுங்குமுறைவிதியின் கீழ் உள்ள விலக்கத்தீர்வு அமைப்புமுறையானது மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைக்கப்பட்டுள்ள மின் பகிர்மான உரிமதாரர்(கள்), உரிமம் பெற்றுள்ள மின் பகிர்மான உரிமதாரர்(கள்) மற்றும் முழு திறந்தவெளி நுழைவுரிமை மின் நுகர்வோர்களுக்கும் பொருந்துதல் வேண்டும். |

| *வ. எண்.* | *இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி* | *திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி* |
|---|---|---|
| | | வரம்புரையாக இந்த ஒழுங்குமுறைவிதிகள் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட பின்பு பிந்திய நாளில் மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை அல்லது மின் பகிர்மான அமைப்புமுறையுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து திறந்தவெளி நுழைவுரிமை மின் நுகர்வோர்களுக்கும் பொருந்துதல் வேண்டும். |
| 3 | **6. எரிசக்தி கணக்கிடுதல் விவர அறிக்கைகள்.**<br><br>(1) முதல் (5) வரை XXX<br><br>(1) ஒரு விரிவான எரிசக்தி கணக்கு வைப்பு நடைமுறை மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் தயார் செய்யப்பட்டு அது ஆணையத்தின் ஒப்புதலுக்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.<br><br>வரம்புரையாக நடைமுறையினை ஆணையத்தின் ஒப்புதலுக்கு பணிந்தனுப்புவதற்கு முன்னர் வரைவு நடைமுறையினை மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்து சம்பந்தப்பட்டவர்களின் கலந்தாய்வு மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | **6. எரிசக்தி கணக்கிடுதல் விவர அறிக்கைகள்.**<br><br>(1) முதல் (5) வரை XXX<br><br>(6) ஒரு விரிவான எரிசக்தி கணக்கு வைப்பு நடைமுறை மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் தயார் செய்யப்பட்டு அது ஆணையத்தின் ஒப்புதலுக்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். வரம்புரையாக நடைமுறையினை ஆணையத்தின் ஒப்புதலுக்கு பணிந்தனுப்புவதற்கு முன்னர் வரைவு நடைமுறையினை மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்து சம்பந்தப்பட்டவர்களின் கலந்தாய்வு மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| 4 | **7. விலக்கத் தீர்வு அமைப்புமுறையினை இயக்குவதற்கான கோட்பாடுகள்**<br><br>(1) XXX<br><br>(A) XXX<br><br>(B) XXX<br><br>(C) அலைவெண்ணுக்கான இயக்க இடைத்தொலைவு (Operating range for Frequency ): அவ்வப்போது இந்திய மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின் கட்டமைப்பு விதித்தொருப்பு ஆகியவைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள இடைத்தொலைவிற் கிணங்க காலத்தொகுதிக்கான சராசரி மின் கட்டமைப்பு அலைவெண் இயல்பான இயக்க இடைத்தொலைவில் இருத்தல் வேண்டும். ஆணையத்தால் அவ்வப்போது குறித்துரைக்கப்பட்டுள்ள அலைவெண்ணின் அலைவரிசை இயக்க இடைத்தொலைவுக்கு அப்பால் விலக்கம் ஏதும் அனுமதிக்கப்படமாட்டாது.<br><br>(D) XXX<br><br>(E) தீர்வுக்கான கால அளவு: மண்டல விலக்கக் கணக்குகளை தீர்வு செய்யும் அமைப்புமுறையானது பின்பற்றும் நடைமுறைக்கு பொருந்தும்படி, மாநில விலக்க ஒருங்கிணை கணக்குகளை தயார் செய்தல் மற்றும் தீர்வு செய்தல் வாராந்தர அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.<br><br>(F) XXX<br><br>(G) XXX<br><br>(H) XXX | **7. விலக்கத் தீர்வு அமைப்புமுறையினை இயக்குவதற்கான கோட்பாடுகள்**<br><br>(1) XXX<br><br>(A) XXX<br><br>(B) XXX<br><br>(C) அலைவெண்ணுக்கான இயக்க இடைத் தொலைவு (Operating range for Frequency): அவ்வப்போது இந்திய மின் கட்டமைப்பு விதித்தொகுப்புகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள இடைத்தொலைவிற் கிணங்க காலத்தொகுதிக்கான சராசரி மின் கட்டமைப்பு அலைவெண் இயல்பான இயக்க இடைத்தொலைவில் இருத்தல் வேண்டும். அலைவெண்ணுக்கான இயக்க இடைத்தொலைவுக்கு அப்பால் விலக்கம் ஏதும் அனுமதிக்கப்படமாட்டாது.<br><br>குறிப்பு:– மின் கட்டமைப்பு அலைவரிசை = f மற்றும் fband = [49.90 மின்னதிர்வுகள் < f < 50.05 மின்னதிர்வுகள்] மற்றும் இந்த அலைவெண்ணின் அலைவரிசை இயக்க இடைத்தொலைவு இந்த ஒழுங்குமுறைவிதியில் பொருந்தக்கூடிய தருணத்தில் பொறுத்தப்படுத்தல் வேண்டும்.<br><br>(D) XXX<br><br>(E) தீர்வுக்கான கால அளவு: மாநில விலக்க ஒருங்கிணை கணக்குகளை தயார் செய்தல் மற்றும் தீர்வு செய்தல் வாராந்தர அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் மேலும் இவை வாராந்திர அடிப்படையில் மாநில மின்சுமை பகுப்பு மைய இணையதளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்<br><br>(F) XXX<br><br>(G) XXX<br><br>(F) XXX<br><br>(G) XXX<br><br>(H) XXX |

| வ. எண். | இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி | திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி |
|---|---|---|
| | (I) இழப்புகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஆதாரம்: மாநில விலக்க ஒருங்கிணை கணக்கு வைப்பு நோக்கத்திற்காக முந்திய ஐம்பத்திரெண்டு வாரங்களுக்கான சராசரி மாநிலத்திற்குள்ளான மின்செலுத்தல் எரிசக்தி இழப்புகுறித்தான தகவல் மாநிலமின் சுமை பகுப்பு மையத்தின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் மாநிலத்திற்குள்ளான சராசரி மின் செலுத்தல் இழப்புகள் மாநிலத்திலுள்ள ஒன்வொரு உறுப்பமைவின் உள்ளபடியான மின் உள்ளிழுப்பின் விழுக்காட்டளவின்படி மாநில உறுப்பமைவு களுக்கிடையே பங்கீடு செய்யப்படுதல் வேண்டும்.<br><br>இருந்தாலும் மாநில உறுப்பமைவுகளிடையே பங்கீடு செய்யப்பட்ட மின்பகிர்மான இழப்புகள் ஆணையத்தால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும். | (I) இழப்புகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஆதாரம்: திட்டமிடலின் நோக்கத்திற்காக அவ்வப்போது வெளியிடப்படும் ஆணையத்தின் மின்சார வீத ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள மின்செலுத்தல் மற்றும் மின்பகிர்மான எரிசக்தி இழப்புகள் மாநிலத்திலுள்ள அந்தந்த காலத்தொகுதியில் ஒவ்வொரு உறுப்பமைவின் உள்ளபடியான மின் உள்ளிழுப்பின் விழுக்காட்டளவின்படி மாநில உறுப்பமைவுகளுக்கிடையே பங்கீடு செய்யப்படுதல் வேண்டும்.<br><br>இருப்பினும் மாநில மின் சுமை பகுப்பு மையம் காலத்தொகுதி வாரியாக உள்ளபடியான மாநிலத்திற்குள்ளான மின் செலுத்தல் இழப்புகள் குறித்த கணக்குகளை பராமரித்து அதன் வலைதளத்தில் வெளியிடுதல் வேண்டும். |
| 5 | **9. சூதாட்டத்தில் ஈடுபடுதலுக்கான நடத்தும்முறை**<br><br>(1) xxx<br><br>(2) (1) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின்கீழ் ஆணையத்தால் தொடங்கப்பட்ட நடவடிக்கைகள் அல்லது இது தொடர்பாக செய்யப்பட்ட விசாரணையில், ஏதாவது மின் விற்பனையாளர் அல்லது மின்சாரம் விலைக்குவாங்குபவர் சூதாட்டத்தில் ஈடுபடுவதாக நிரூபிக்கப்பட்டால் ஆணையம் இந்த சட்டம் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதிகளின்கிறான வேறு ஏதாவது நடவடிக்கைக்கு ஊறு பயக்காதவாறு அத்தகைய சூதாட்டத்தில் ஈடுபட்ட கால அளவில் அத்தகைய மின் விற்பனையாளர் அல்லது மின்சாரம் விலைக்குவாங்குபவரின் விலக்கத்திற்கான ஏதாவது கட்டணங்களை வழங்க மறுக்கலாம். | **9. சூதாட்டத்தில் ஈடுபடுதலுக்கான நடத்தும்முறை**<br><br>(1) xxx<br><br>(2) (1) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின்கீழ் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அல்லது இது தொடர்பாக செய்யப்பட்ட விசாரணையில், ஏதாவது மின் விற்பனையாளர் அல்லது மின்சாரம் விலைக்குவாங்குபவர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டால், வரையறுக்கப்பட்ட சட்டம் அல்லது ஒழுங்குமுறைவிதிகளின் வேறு ஏதாவது நடவடிக்கைக்கு ஊறு பயக்காதவாறு, ஆணையம் சூதாட்டத்தில் ஈடுபட்ட காலத்திற்குடைய விலக்கத்திற்கான தண்டத்தொகையினை அத்தகைய மின் விற்பனையாளர் அல்லது மின்சாரம் விலைக்குவாங்குபவருக்கு விதிக்கலாம்.<br><br>(3) உள் ஒழுங்குமுறைவிதிகள் (1) மற்றும் (2) இருந்தபோதிலும், மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் கேட்கப்படும் போது, மின் உற்பத்தி நிறுவனம் அதன் மின் உற்பத்தி நிலையத்தின் அறிவிக்கப்பட்ட திறனை நிரூபிக்க வேண்டும். மின் உற்பத்தி நிறுவனம் அறிவிக்கப்பட்ட திறனை நிரூபிக்கத் தவறும் நிலையில், உள் ஒழுங்குமுறைவிதி (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஆணையத்தின் முன் பொருத்தமான மனுவை தாக்கல் செய்வதன் மூலம் மாநில மின்சுமை பகுப்பு மையம் அத்தகைய மின் உற்பத்தி நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கைகளைத் தொடங்கலாம். |
| 6 | **10. விலக்கங்களுக்கான கட்டணங்கள்**<br><br>**(A) மின்விற்பனையாளர்கள் மற்றும் மின் விலைக்கு வாங்குபவர்களுக்கான விலக்கக் கட்டணங்கள்:**<br><br>(1) 2014 ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (விலக்கத் தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள அதன் திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு விலக்கக் கட்டணங்களுக்கான நெறிய விலையினை கருத்தில் கொண்டும் இந்த ஒழுங்குமுறைவிதிகளின் பின் இணைப்பு–1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையியலைக் கருத்திற்கொண்டும் இந்த ஒழுங்குமுறைவிதியின் (2) முதல் (7) வரையிலான கூறுகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு மாநில உறுப்பமைவுகளான—மின் விலைக்குவாங்குபவரின் மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் குறைவான மின் உட்செலுத்தல் மற்றும் மின் விலைக்கு வாங்குபவரின் குறைவான உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பானையாளரின் மிகை மின் உட்செலுத்தல் ஆகியவைகளுக்கான விலக்குக் கட்டணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு காலத் தொகுதி அளவின் சராசரி அலைவெண்ணின்படி கணக்கிடப்படுதல் வேண்டும். | **10. விலக்கங்களுக்கான கட்டணங்கள்**<br><br>**(A) மின்விற்பனையாளர்கள் மற்றும் மின் விலைக்கு வாங்குபவர்களுக்கான விலக்கக் கட்டணங்கள்:**<br><br>(1) இந்த ஒழுங்குமுறைவிதிகளின் பின் இணைப்பு–1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு விலக்கக் கட்டணங்களுக்கான நெறிய விலையினை கருத்தில் கொண்டும் இந்த ஒழுங்குமுறைவிதியின் (2) முதல் (7) வரையிலான கூறுகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு மாநில உறுப்பமைவுகளான மின் விலைக்கு வாங்குபவரின் மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் குறைவான மின் உட்செலுத்தல் மற்றும் மின் விலைக்கு வாங்குபவரின் குறைவான உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் மிகை மின் உட்செலுத்தல் ஆகியவைகளுக்கான விலக்குக் கட்டணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு காலத் தொகுதி அளவின் சராசரி அலைவெண்ணின்படி கணக்கிடப்படுதல் வேண்டும்: |

| *வ. எண்.* | *இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி* | *திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி* |
|---|---|---|
| | வரம்புரையாக விலக்க அறிகுறியின் மாறுதல் ஒவ்வொரு 6 காலத் தொகுதிக்கு ஒருமுறை செய்யப்படுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் தொடர்ச்சியான மீறல் கால அளவுக்கு பொருந்தக்கூடிய விலக்கக் கட்டணங்களில் 20 விழுக்காடு வீதத்தில் கூடுதல் கட்டணங்கள் விதிக்கப்படுதல் வேண்டும்.<br><br>மேலும் வரம்புரையாக மேற்சொன்னவாறு குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் கட்டணங்கள் மின் விற்பானையாளர்(கள்) / மின் விலைக்குவாங்குபவர்(களின்) அத்தகைய தவறுகைக்கான கூடுதல் கட்டணங்கள் ஆணையத்தால் தனியாக அறிவிக்கை செய்யப்படவிருக்கும் நாளிலிருந்து பொருந்துதல் வேண்டும். | வரம்புரையாக மின்விற்பனையாளர் மற்றும் மின் விலைக்கு வாங்குபவர் ஒவ்வொரு காலத்தொகுதிற்குள்ள திட்டமிடலினை கடைபிடித்தல் வேண்டும் மற்றும் எத்தகைய விலக்கமும் தொடர்ச்சியான 6 காலத் தொகுதிக்கு மிகாமல் இருத்தல் வேண்டும் அதாவது விலக்க அறிகுறியின் மாறுதல் ஒவ்வொரு 6 காலத் தொகுதிக்கு ஒருமுறை செய்யப்படுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் தொடர்ச்சியான மீறல் கால அளவிற்கு, அதாவது 7வது காலத்தொகுதியிலிருந்து, பொருந்தக்கூடிய விலக்கக் கட்டணங்களில் 20 விழுக்காடு வீதத்தில் கூடுதல் கட்டணங்கள் விதிக்கப்படுதல் வேண்டும்.<br><br>மேலும் வரம்புரையாக மேற்சொன்னவாறு குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் கட்டணங்கள் மின் விற்பானையாளர்(கள்) / மின் விலைக்குவாங்குபவர்(களின்) அத்தகைய தவறுகைக்கான கூடுதல் கட்டணங்கள் ஆணையத்தால் தனியாக அறிவிக்கை செய்யப்படவிருக்கும் நாளிலிருந்து பொருந்துதல் வேண்டும். |
| | (2) ஆணையத்தால் மின் கட்டணவீதம் நிர்ணயிக்கப்படும் மின் உற்பத்தி நிலையங்களின் உள்ளபடியான மின் உற்பத்தி திட்டமிடப்பட்ட மின் உற்பத்தியைவிட அதிகமாக இருக்கும்போது விலக்கத்திற்கான கட்டணங்கள் ஆணையத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படவிருக்கும் மேல்வரம்பு விலை வீதத்திற்கு (cap rate) [ 311] பைசா/ கிலோ வாட் மணி மிகையாகாமல் இருத்தல் வேண்டும், | நீக்கப்பட்டது |
| | (3) 10 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (A ) கூறு (2) ஆம் உட் கூறின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் தவிர எரிபொருள் ஆதாரத்தினை பொருட்படுத்தாமலே உள்ளபடியான உட்செலுத்தல் திட்டமிட்ட மின் உற்பத்தியை விட கூடுதலாகவோ அல்லது முறைவாகவோ இருக்கும்போது விலக்கத்திற்கான கட்டணங்கள் மேல்வரம்பு விலையான [303–04] பைசா/கிலோ வாட் மணிக்கு மிகையாகாமல் இருத்தல் வேண்டும் | நீக்கப்பட்டது |
| | (4) முதல் (8) வரை XXX | (4) முதல் (8) வரை XXX |
| | (9) ஒருமின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி அலகினால், அந்த மின் உற்பத்தி அலகின் வணிகரீதியான தொடக்க நாளுக்கு முன்னர், மின்கட்டமைப்பில் உட்செலுத்தப்பட்ட நிலையற்ற மின்சாரத்திற்கு, சோதனையின் விளைவாக அத்தகைய ஒட்டத்தின்போது உட்செலுத்தப்படும் நிலையற்ற மின்சாரத்திற்குரிய விலக்கக்கட்டணங்களின்படி கொடுக்கப்படுதல் வேண்டும். இவ்விலக்கக் கட்டணங்கள், இத்தகைய உட்செலுத்தலுக்கு உபயோகப்படுத்தும் மத்திய ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட [பிரதான எரிபொருள்] க்குரிய, கீழ்க்கண்டவாறு இணையான மேல்வரம்பு விலை வீதத்திற்கு உட்பட்டு இருக்கும். சோதனை ஒட்டற்திற்குப்பின் உட்செலுத்தப்படும் மின்சாரத்திற்கு, ஆறுமாத காலத்திற்கு மிகையாகாத கால அளவு அல்லது அவ்வப்போது திருத்தியமைக்கப்படும் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டமைப்பு இணைதிறம் மற்றும் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகள்) இன்படி ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட நீட்டிக்கப்பட்ட கால அளவிற்கு கட்டணங்கள் கொடுக்கப்படுதல் வேண்டும். | (9) வணிகரீதியான தொடக்க நாளுக்கு முன்னர், மின்கட்டமைப்பில் உட்செலுத்தப்பட்ட நிலையற்ற மின்சாரத்திற்குரிய விலக்கக்கட்டணங்கள் பூஜ்யம் என கணக்கிடப்படும் |

<table>
<tr><th>வ. எண்.</th><th>இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி</th><th>திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி</th></tr>
<tr><td></td><td>
<table>
<tr><td>உள்நாட்டு, நிலக்கரி / பழுப்பு நிலக்கரி / நீர்நிலை</td><td>அனுப்பப்பட்ட 1[1.78] / கிலோவாட் மணி</td></tr>
<tr><td>நிருவகிக்கப்பட்ட விலை அமைப்பு முறையிலான எரிவாயு எரிபொருளாக அமைப்பு</td><td>நிறுவகிக்கப்பட்ட விலை அமைப்பு முறையின்கீழ் எரிவாயு விலை இந்திய அரசால் மாற்றியமைக்கும் நாள் வரையிலும் அனுப்பப்பட்ட [2.82] / கிலோ வாட் மணி மற்றும் அதற்க்கு பின்னர் தனியாக ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட விலை வீதத்தில்</td></tr>
<tr><td>இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி</td><td>அனுப்பப்பட்ட 1[3.03] / கிலோ வாட் மணி</td></tr>
<tr><td colspan="2">மத்திய ஆணையத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு பிரதான எரிபொருளுக்கான விலை பின்பற்றப்பட வேண்டும்.</td></tr>
</table>
</td><td></td></tr>
<tr><td>7</td><td>
11. விலக்க கொள்ளளவின் வரம்புகள் (limits) மற்றும் வரம்புகளை மீறுவதற்கான பின் விளைவுகள்:—
(A) மின் கட்டமைப்பின் அலைவெண் ‘49.85 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும் மற்றும் 50.05’ மின்னதிர்வுகளுக்கு குறைவாகவும் இருக்கும்போது ஒரு காலத் தொகுதியின்போது ஏதாவது மின் விலைக்குவாங்குபவரின் மிகை மின் உள்ளிழுப்பு அல்லது குறைவான மின் உள்ளிழுப்பு அதனுடைய திட்டமிடப்பட்ட உள்ளிழுப்பிலிருந்து 12 விழுக்காட்டிற்கு மிகையாகாமல் அல்லது இந்த ஒழுங்குமுறைவிதியின் (B) கூறின்படி கணக்கிடப்பட்ட வரம்பு [X] மெகாவாட் இதில் எது குறைவோ அவ்வாறு இருத்தல் வேண்டும்.
வரம்புரையாக ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்படலாகும் ஓர் ஆண்டுக்கு முன்னரல்லாத ஒரு நாளிலிருந்து. ஒரு நாளின் திட்டமிட்டவற்றிலிருந்தான மொத்த விலக்கு மின் உள்ளிழுப்பு செய்கின்ற உறுப்பமைவுகளின் பொத்த திட்டமிடப்பட்ட அளவிலிருந்து 3 விழுக்காட்டிற்கு மிகுதியாக இருத்தல் கூடாது மற்றும் மேற்குறிப்பிட்ட மின் உற்பத்தியாளர்களுக்கு 1 விழுக்காடு மற்றும் ஒரு நாள் அடிப்படையிலான கொடுக்கப்பட வேண்டிய/ பெறப்பட வேண்டிய விலக்கத்தீர்வு கட்டணங்களில் இத்தகைய பிறல்களுக்கு 20 விழுக்காடு பொருந்துதல் வேண்டும்.
(B ) மின் பகிர்மான உரிமதாரர் (உரிமதாரர்கள்) மற்றும் மின் விலைக்குவாங்குபவரின் [X] மெகாவாட்—இன் கொள்ளளவு வரம்பு பின்வருமாறு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.
i. திட்டமிட்ட அளவில் 12 விழுக்காடு, (மின் பகிர்மான உரிமதாரர் அல்லது மின் விலைக்குவாங்குபவரின் உச்ச நிலை மின்தேவை அல்லது மின் விலைக்குவாங்குபவர்/ ∑NCPD) x மாநில கொள்ளளவு வரம்பு (State Volume Limit) இதில் குறைந்தது.
இதில் NCPD (குவியா நிலை உச்ச மின்தேவை) என்பது பின்வரும் (iii) ஆம் உட் கூறின்கிழ் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறைக்குட்பட்டு மின் பகிர்மான உரிமதாரர் மற்றும் மின் விலைக்குவாங்குபவர்(கள்)—இன் உச்ச நிலை மின்தேவையின் மொத்தம்.
</td><td>
11. விலக்க கொள்ளளவின் வரம்புகள் (limits) மற்றும் வரம்புகளை மீறுவதற்கான பின் விளைவுகள்:—
(A) மின் கட்டமைப்பின் அலைவெண் ‘49.85 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும் மற்றும் 50.05’ மின்னதிர்வுகளுக்கு குறைவாகவும் இருக்கும்போது ஒரு காலத் தொகுதியின்போது ஏதாவது மின் விலைக்குவாங்குபவரின் மிகை மின் உள்ளிழுப்பு அல்லது குறைவான மின் உள்ளிமுப்பு அதனுடைய திட்டமிடப்பட்ட உள்ளிழுப்பிலிருந்து 12 விழுக்காட்டிற்கு மிகையாகாமல் அல்லது இந்த ஒழுங்குமுறைவிதியின் (B) கூறின்படி கணக்கிடப்பட்ட வரம்பு [X] மெகாவாட் இதில் எது குறைவோ அவ்வாறு இருத்தல் வேண்டும்.
வரம்புரையாக ஒரு நாளின் திட்டமிட்டவற்றிலிருந்தான மொத்த விலக்கு மின் உள்ளிழுப்பு செய்கின்ற உறுப்பமைவுகளின் பொத்த திட்டமிடப்பட்ட அளவிலிருந்து 3 விழுக்காட்டிற்கு மிகுதியாக இருத்தல் கூடாது மற்றும் மேற்குறிப்பிட்ட மின் உற்பத்தியாளர்களுக்கு 1 விழுக்காடு மற்றும் ஒரு நாள் அடிப்படையிலான கொடுக்கப்பட வேண்டிய/பெறப்படவேண்டிய விலக்கத்தீர்வு கட்டணங்களில் இத்தகைய பிறல்களுக்கு 20 விழுக்காடு பொருந்துதல் வேண்டும் மற்றும் ஒழுங்குமுறைவிதி 9ன் உள் ஒழுங்குமுறைவிதி 2ன் குறித்துரைக்கப்பட்டவாறு இந்த கூடுதல் கட்டணங்கள் சூதாட்டத்தில் ஈடுபடுதலுக்கான தண்டத்தொகையுடன் சேர்த்து கணக்கிடப்படும்
(B) xxx
i. xxx
</td></tr>
</table>

| வ. எண். | இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி | திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி |
|---|---|---|
| | ii. மாநில கொள்ளளவு வரம்பான (L) மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய விலக்கத்தீர்வு அமைப்புமுறை ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் அதன் மீதான திருத்தங்களின்படி மாநிலத்திற்கு பொருந்தக்கூடிய கொள்ளளவு வரம்புடன் இணைக்கப்படுதல் வேண்டும். | ii. xxx |
| | iii . இதில், மின் பகிர்மான உரிமதாரரின் உச்சநிலை மின்தேவையானது, பதிவு செய்யப்பட்ட முந்திய நிதியாண்டின் உச்சநிலை மின்தேவை அல்லது வரப்போகிற நிதியாண்டின் திட்டமிடப்பட்ட உச்சநிலை மின்தேவை, இதில் எது உயர்வோ அதுவாக இருத்தல் வேண்டும். | iii. xxx |
| | வரம்புரையாக மின் கட்டமைப்பின் அலைவெண் "49.85 மின்னதிர்வுகளுக்குகீழ்" இருக்கும்போது மின் விலைக்கு வாங்குபவரால் மிகைமின் உள்ளிழுப்புசெய்ய அனுமதிக்கப்படமாட்டாது மற்றும் மின் கட்டமைப்பு அலைவெண் "50.05 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும்" இருக்கும்போது மின் விலைக்குவாங்குபவரால் குறைவாக மின் உள்ளிழுப்பு செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. | வரம்புரையாக மின் கட்டமைப்பின் அலைவெண் "49.90 மின்னதிர்வுகளுக்குகீழ்" இருக்கும்போது மின் விலைக்கு வாங்குபவரால் மிகைமின் உள்ளிழுப்பு செய்யவோ மற்றும் மின் விற்பனையாளரின் குறைவாக மின் உட்செலுத்தல் செய்யவோ அனுமதிக்கப் படமாட்டாது மற்றும் மின் கட்டமைப்பு அலைவெண் "50.05 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும்" இருக்கும்போது மின் விலைக்குவாங்குபவரால் குறைவாக மின் உள்ளிழுப்பு செய்யவோ மற்றும் மின் விற்பனையாளரின் மிகை மின் உட் செலுத்தல் செய்யவோ அனுமதிக்கப்படமாட்டாது. |
| | (C) xxx | (C) xxx |
| | (D) காலத் தொகுதியின் சராசரி மின் கட்டமைப்பு அலைவெண் "49.85 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மிகுதியாக இருக்கும்போது, ஒவ்வொறு காலத் தொகுதியிலும் இந்த ஒழுங்குமுறைவிதியின் (B) கூறு மற்றும் (C) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான மிகையான கொள்ளளவு எல்லைக்கு இந்த ஒழுங்குமுறைவிதியின் 10 ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக் கப்பட்டுள்ள விலக்கத்திற்கான கட்டணங்களுடன் மிகுதியான மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தலுக்கான இந்த ஒழுங்குமுறைவிதியின் (M) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையியலுக் கிணங்க பின் இணைப்பு II இன் அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்களில் விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் பொருந்துதல் வேண்டும். | (D) காலத் தொகுதியின் சராசரி மின் கட்டமைப்பு அலைவெண் "49.90 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மிகுதியாக இருக்கும்போது, ஒவ்வொறு காலத் தொகுதியிலும் இந்த ஒழுங்குமுறைவிதியின் (B) கூறு மற்றும் (C) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான மிகையான கொள்ளளவு எல்லைக்கு இந்த ஒழுங்குமுறைவிதியின் 10 ஆம் ஒழுங்குமுறை விதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலக்கத்திற்கான கட்டணங்களுடன் மிகுதியான மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தலுக்கான இந்த ஒழுங்குமுறைவிதியின் (M) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையியலுக் கிணங்க பின் இணைப்பு II இன் அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்களில் விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் பொருந்துதல் வேண்டும். |
| | (E) நிலக்கரி அல்லது பழுப்பு நிலக்கரி அல்லது நிருவகிக்கப்பட்ட விலை அமைப்புமுறையின்கீழ் வழங்கப்பட்டுள்ள எரிவாயுவை எரிபொருளாகப் பயன்படுத்தும் ஆணையத்தால் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் மின் கட்டமைப்பின் அலைவெண், "49.85 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும்" இருக்கும் போது இந்த ஒழுங்குமுறைவிதியின் (C) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு காலத் தொகுதியின் கொள்ளளவுக்கு மிகுதியாக குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம், இந்த ஒழுங்குமுறைவிதியின் (O) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையியலுக் கிணங்க பின் இணைப்பு II இன் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்களில் இருத்தல் வேண்டும் | (E) எரிபொருள் ஆதாரத்தினை பொருட்படுத்தாமலே குறைவான மின் உட்செலுத்தலின் விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம், அத்தகைய மின் உற்பத்தி நிலையத்தின் மின் கட்டண வீதம் ஆணையத்தால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டோ அல்லது இல்லாது இருப்பினும் அனைத்து வகையிலான மின் விற்பானையாளர்களுக்கு சமமாக இருத்தல் வேண்டும் |
| | (F ) முதல் (K ) வரை xxx | (F) முதல் (K) வரை xxx |

| வ. எண். | இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி | திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி |
|---|---|---|
| | (L) இந்த ஒழுங்குமுறைவிதியின் (N) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஃ முறையியலின்படி மின் கட்டமைப்பின் அலைவெண் – "49.85 மின்னதிர்வுகளுக்கு குறைவாக" இருக்கும்போது மிகை மின் உள்ளிழுப்பு அல்லது குறைவான மின் உட்செலுத்தலுக்கு இந்த ஒழுங்குமுறைவிதிகளின் 10 ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக் கப்பட்டுள்ள விலக்கத்திற்கான கட்டணங்களுடன் விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் பொருந்துதல் வேண்டும். | (L) இந்த ஒழுங்குமுறைவிதியின் (N) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஃ முறையியலின்படி மின் கட்டமைப்பின் அலைவெண் – "49.90 மின்னதிர்வுகளுக்கு குறைவாக" இருக்கும்போது மிகை மின் உள்ளிழுப்பு அல்லது குறைவான மின் உட்செலுத்தலுக்கு இந்த ஒழுங்குமுறைவிதிகளின் 10 ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக் கப்பட்டுள்ள விலக்கத்திற்கான கட்டணங்களுடன் விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் பொருந்துதல் வேண்டும். |
| | வரம்புரையாக நிலக்கரி அல்லது பழுப்பு நிலக்கரி அல்லது நிருவகிக்கப்பட்ட விலை அமைப்புமுறையின்கீழ் வழங்கப்பட்டுள்ள எரிவாயுவை எரிபொருளாகப் பயன்படுத்தும் ஆணையத்தால் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் மின் கட்டமைப்பின் அலைவெண், "49.85 மின்னதிர்வுகளுக்கு குறைவாக இருக்கும்போது" ஒரு காலத் தொகுதியில் ஒரு மின் விற்பனையாளரின் குறைவான மின் உள்ளிழுப்புக்கான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம், இந்த ஒழுங்குமுறைவிதியின் (O) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையியலின்படி பிரதான எரிபொருளுக்கு முந்திய மாதத்தில் பட்டியலிடப் பட்டவாறு மின் சக்தி கட்டணங்களுக்கு சமமாக 100 விழுக்காடு மேல்வரம்பு விலை வீதத்திற்கு சமமாக இருத்தல் வேண்டும். | நீக்கப்பட்டது |
| | (M) இந்த ஒழுங்குமுறைவிதியின் (B ) பற்றும் (C) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு மின் கட்டமைப்பின் அலைவெண் "49.85 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும்" இருக்கும்போது ஒவ்வொரு காலத் தொகுதியிலும் கொள்ளளவு வரம்பிற்கு மிகையான மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் மின் விலைக்குவாங்குபவர் மற்றும் மின் விற்பனையாளர்களின் மின் கட்டமைப்பு ஒழுங்கினை கருத்திற்கொண்டு விலக்க கட்டணத்தின் விழுக்காடாக ஆணையத்தால் குறித்துரைக்கப்படுதல் வேண்டும். இது ஒரு காலத் தொகுதியின் சராசரி மின் கட்டமைப்பு அலைவெண்ணுக்கு ஒத்திசைவானதாக இருக்க வேண்டும். | (M) இந்த ஒழுங்குமுறைவிதியின் (B ) பற்றும் (C ) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு மின் கட்டமைப்பின் அலைவெண் "49.90 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும்" இருக்கும்போது ஒவ்வொரு காலத் தொகுதியிலும் கொள்ளளவு வரம்பிற்கு மிகையான மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் இந்த ஒழுங்குமுறைவிதியின் இணைப்பு–IIன் அட்டவணை–Iல் குறிப்பிடப்பட்டவாறு விதிக்கப்படும். இந்த கட்டணம் விலக்க கட்டணங்களுடன் கூடுதலாக இந்த ஒழுங்குமுறைவிதியின் இணைப்பு–I மற்றும் III ல் குறிப்பிட்டவாறு விதிக்கப்படும். |
| | வரம்புரையாக இந்த ஒழுங்குமுறைவிதியின் (B) மற்றும் (C) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட அளவிலிருந்தான விலக்க விழுக்காட்டின் மிகை கொள்ளளவு வரம்பினைப் பொறுத்து மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தல்களுக்கான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணங்களுக்கு வெவ்வேறு வீதங்களை ஆணையம் குறித்துரைக்கலாம். | |
| | (N) மின் கட்டமைப்பின் அலைவெண் "49.85 மின்னதிர்வுகளுக்கு குறைவாக" இருக்கும்போது ஒவ்வொரு காலத் தொகுதிக்கான மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும். இது மின் விலைக்கு வாங்குபவர்கள் மற்றும் மின் விற்பனையாளர்களின் மின் கட்டமைப்பின் ஒழுங்கின் மீதான நடத்தையினை கருத்திற்கொண்டு காலத் தொகுதியின் சராசரி மின் கட்டமைப்பு அலைவெண்ணுக்கு தொடர்பான விலக்கக் கட்டணங்களின் விழுக்காடாக இருக்க வேண்டும். | (N) மின் கட்டமைப்பின் அலைவெண் "49.90 மின்னதிர்வுகளுக்கு குறைவாக" இருக்கும்போது ஒவ்வொரு காலத் தொகுதிக்கான மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணம் ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும். இது மின் விலைக்கு வாங்குபவர்கள் மற்றும் மின் விற்பனையாளர்களின் மின் கட்டமைப்பின் ஒழுங்கின் மீதான நடத்தையினை கருத்திற்கொண்டு காலத் தொகுதியின் சராசரி மின் கட்டமைப்பு அலைவெண்ணுக்கு தொடர்பான விலக்கக் கட்டணங்களின் விழுக்காடாக இருக்க வேண்டும். |
| | வரம்புரையாக மிகை மின் உள்ளிழுப்புகள் மற்றும் குறைவான மின் உட்செலுத்தல்களுக்கு மற்றும் "49.85 மின்னதிர்வுகளுக்குக் குறைவான" வெவ்வேறு வரம்புகளுக்குமான விலக்கத்திற்கான கூடுதல் கட்டணங்களுக்கு ஆணையம் வெள்வேறு வீதங்களை குறித்துரைக்கலாம். | |

| வ. எண். | இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி | திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி |
|---|---|---|
| | (O) இந்த ஒழுங்குமுறைவிதியின் (6) கூறில் குறித்துரைக்கப்பட்டவாறு மின் கட்டமைப்பின் அலைவெண் "49.85 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு மேலும்" இருக்கும்போது நிலக்கரி / பழுப்புநிலக்கரி அல்லது நிருவகிக்கப்பட்ட விலை அமைப்புமுறையின்கீழ் வழங்கப்பட்டுள்ள எரிவாயுவை எரிபொருளாக பயன்படுத்தும் ஆணையத்தால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் ஒரு காலத் தொகுதியிலான குறைவான மின் உட்செலுத்தலுக்கான விலக்கத்திற்கான கூடுதல்கட்டணம் ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும். இது மின் கட்டமைப்பின் ஒழுங்கு தொடர்பாக ஆணையத்தால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களின் இயங்குமுறையினைக் கருத்திற்கொண்டு, மேல்வரம்பு விலை வீதத்தின் விழுக்காடாகவோ அல்லது அந்த காலத் தொகுதியின் மின் கட்டமைப்பு அலைவெண்ணுக்கு ஒத்திசைவாகவோ அல்லது இரண்டுமாகவோ இருத்தல் வேண்டும். | நீக்கப்பட்டது |
| | (P) xxx | (P) xxx |
| | (Q) ஆணையத்தால் தனியாக அறிவிக்கை செய்யப்படவிருக்கும் நாளிலிருந்து அடையாள மாற்ற நிபந்தன மீறலுக்கு ஒரு நாளின் ஒவ்வொரு மீறலுக்கும், மீறலுக்கான கூடுதல் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். | (Q) ஆணையத்தால் தனியாக அறிவிக்கப்படும் இந்த திருத்தம் அறிவிக்கை செய்யப்படவிருக்கும் நாளிலிருந்து அடையாள மாற்ற நிபந்தன மீறலுக்கு ஒரு நாளின் ஒவ்வொரு மீறலுக்கும், செலுத்தப்படவேண்டிய / பெறப்படவேண்டிய நாளொன்றின் அடிப்படை விலக்க கட்டண அமைப்புமுறையின்படி பொருந்தக்கூடிய விலக்க கட்டணத்தில் 20 சதவிகிதம் மீறலுக்கான கூடுதல் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். |
| | உதாரணமாக ஒவ்வொரு ஆறு காலத் தொகுதிக்கும் பிறகு குறைந்த அளவு ஒருமுறை அடையாள மாற்றம் நடைபெற வேண்டும். அவ்வாறாக t1 காலத் தொகுதியிலிருந்து ஆரம்பமாகும் உறுப்பமைவு t6 காலத் தொகுதிக்கு பின்னர் அடையாள மாற்றம் செய்தல் வேண்டும். t6 காலத் தொகுதிக்குப் பிறகு உடனடியாக அடையாள மாற்றம் நடைபெறாமல் t7 காலத்தொகுதியிலிருந்து t12 காலத் தொகுதிவரையிலும் நடைபெறுமானால், ஒரு மீறலுக்கு சமமான கூடுதல் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். (t12 காலத் தொகுதிக்கு பின்னர் உடனடியாக அடையாள மாற்றம் நடைபெறாமல் t13 காலத் தொகுதியிலிருந்து t18 காலத் தொகுதிவரையிலும் நடைபெறும் நேர்வில் இரண்டு மீறல்களுக்கு சமமான கூடுதல் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். | உதாரணமாக ஒவ்வொரு ஆறு காலத் தொகுதிக்கும் பிறகு குறைந்த அளவு ஒருமுறை அடையாள மாற்றம் நடைபெற வேண்டும். அவ்வாறாக t1 காலத் தொகுதியிலிருந்து ஆரம்பமாகும் உறுப்பமைவு t6 காலத் தொகுதிக்கு பின்னர் அடையாள மாற்றம் செய்தல் வேண்டும். t7 காலத் தொகுதியில் உடனடியாக அடையாள மாற்றம் நடைபெறாமல் t8 காலத் தொகுதியிலிருந்து t12 காலத் தொகுதிவரையிலும் நடைபெறுமானால், ஒரு மீறலுக்கு சமமான கூடுதல் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். t12 காலத் தொகுதிக்கு பின்னர், அதாவது t13 கால தொகுதியில், உடனடியாக அடையாள மாற்றம் நடைபெறாமல், t14 காலத் தொகுதியிலிருந்து t18 காலத் தொகுதிவரையிலும் நடைபெறும் நேர்வில் இரண்டு மீறல்களுக்கு சமமான கூடுதல் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். |
| | வரம்புரையாக நீர்த்தேக்கமின்றி நதி நீரோட்டத்தில் அமைந்துள்ள திட்டங்களுக்கான அடையாள மாற்றத் தேவையினை கடைப்பிடிக்காமைக்கான கூடுதல் கட்டணம் ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய நாளிலிருந்து பொருந்துதல் வேண்டும். எனினும் அத்தகைய மின் உற்பத்தியாளர்கள் அடையாள மாற்றத் தேவைகளைப் பின்பற்றுமாறு வேண்டுறுத்தப்படுவதோடு தேவைகளை கடைப்பிடிக்காமைக்கான காரணத்தினை மாநில மின்சுமை பகுப்பு மையத்திற்கு தெரிவிக்குமாறும் கோரப்படுதல் வேண்டும். | |
| | (R) xxx | (R) xxx |
| | (S) xxx | (S) xxx |

| வ. எண். | இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி | திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி |
|---|---|---|
| | (T) மின் கட்டமைப்பின் அலைவெண் "49.85 மின்னதிர்வுகள் மற்றும் அதற்கு கூடுதலாகவும்" மற்றும் "49.85 மின்னதிர்வுகளுக்கு குறைவாகவும்" இருக்கும்போது ஒவ்வொரு மின் விலைக்குவாங்குபவரும் மற்றும் மின் விற்பனைசெய்பவரும் மிகை மின் உள்ளிழுப்பு/குறைவான மின் உட்செலுத்தல் அளவுகளை குறிப்பிட்டு அவைகளுக்கு ஒத்திசைவாக ஒவ்வொரு மின் விலைக்குவாங்குபவரும் மின் விற்பனையாளரும் அனைத்து காலத் தொகுதிக்கும் வாராந்தர அடிப்படையில் தனித்தனியாக செலுத்த வேண்டிய/பெறவேண்டிய விலக்கக் கட்டண விவரங்களை மாநில மின்சுமை பகுப்பு மையம் தயார் செய்து அதனுடைய வலைதளத்தில் விலக்கக் கணக்குகளுக்கான பதிவுருக்களை வெளியிடுதல் வேண்டும். | (T) ஒவ்வொரு மின் விலைக்குவாங்குபவரும் மற்றும் மின் விற்பனைசெய்பவரும் மிகை மின் உள்ளிழுப்பு/குறைவான மின் உட்செலுத்தல் அளவுகளை குறிப்பிட்டு அவைகளுக்கு ஒத்திசைவாக ஒவ்வொரு மின் விலைக்குவாங்குபவரும் மின் விற்பனையாளரும் வாராந்தர அடிப்படையில் தனித்தனியாக செலுத்த வேண்டிய/பெறவேண்டிய விலக்கக் கட்டண விவரங்களை மாநில மின்சுமை பகுப்பு மையம் தயார் செய்து அதனுடைய வலைதளத்தில் விலக்கக் கணக்குகளுக்கான பதிவுருக்களை வெளியிடுதல் வேண்டும். |
| 8 | **13. விலக்கத்திற்கான கட்டணங்களுக்கு கணக்கு வைத்தல்**<br>(1) xxx<br>(2) xxx<br>i. xxx<br>ii. xxx<br>(iii) சரக்கு மற்றும் சேவை வரி (GST ), பிடித்தம் செய்யப்படும் வரி (TDS ) உள்ளடங்கலாக ஆனால் இலைகளுக்கு வரம்பிடப்படாமல் மாநில உறுப்பமைவுகள் பொருந்தக்கூடிய சட்டப்படியான வரிகளை (levies) செலுத்துவதற்கான சட்டப்படியான தேவைகளுக்கு இணங்குதல் வேண்டும்.<br>iv. xxx | **13. விலக்கத்திற்கான கட்டணங்களுக்கு கணக்கு வைத்தல்**<br>(1) xxx<br>(2) xxx<br>i. xxx<br>ii. xxx<br>(iii) மாநில உறுப்பமைவுகள் பொருந்தக்கூடிய சட்டப்படியான வரிகள் (levies) ஏதேனும் இருப்பின் செலுத்துவதற்கான சட்டப்படியான தேவைகளுக்கு இணங்குதல் வேண்டும்.<br>iv. xxx |
| 9 | **14. விலக்கத்திற்கான கட்டணங்கள் செலுத்தலுக்கான அட்டவணை**<br>(1) xxx<br>(2) கூடுதல் கட்டணங்கள் உட்பட விலக்கங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் இரண்டு நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் இருக்குமானால் அதாவது மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் பட்டியல் வெளியிடப்பட்ட பன்னிரெண்டு (12) நாட்களுக்கு அப்பால், செலுத்தத் தவறிய உறுப்பமைவு தாமதமான ஒவ்வொரு நாளுக்கும் 0.06 விழுக்காடு வீதத்தில் தனி வட்டி செலுத்த வேண்டும். இது சட்டத்தின் 56 ஆம்பிரிவுமற்றும் பிற தொடர்புடைய ஒழுங்குமுறைவிதியின்கீழ் எடுக்கப்படலாகும் நடவடிக்கை உள்ளடங்கலாக சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் எடுக்கப்படலாகும் நடவடிக்கைக்கு ஊறு பயக்காதவாறு எடுக்கப்படும் நடவடிக்கை ஆகும்.<br>(3) xxx<br>(4) xxx<br>(5) xxx | **14. விலக்கத்திற்கான கட்டணங்கள் செலுத்தலுக்கான அட்டவணை**<br>(1) xxx<br>(2) கூடுதல் கட்டணங்கள் உட்பட விலக்கங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் இரண்டு நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் இருக்குமானால் அதாவது மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் பட்டியல் வெளியிடப்பட்ட பன்னிரெண்டு (12) நாட்களுக்கு அப்பால், செலுத்தத் தவறிய உறுப்பமைவு தாமதமான ஒவ்வொரு நாளுக்கும் 0.06 விழுக்காடு வீதத்தில் தனி வட்டி செலுத்த வேண்டும் மற்றும் மாநில மின்சுமை பகுப்பு மையத்திலிருந்து செலுத்தத் தவறியதென்ற அறிவிப்பு பெறப்பட்டவுடன், அதனை செலுத்தத் தவறிய உறுப்பமைவரின் மின் நுகர்வு பட்டியலில் சேர்க்கப்படும் முறை இருப்பின் உரிமதாரரால் சேர்க்கப்படும். இது சட்டத்தின் 56 ஆம்பிரிவுமற்றும் பிற தொடர்புடைய ஒழுங்குமுறைவிதியின்கீழ் எடுக்கப்படலாகும் நடவடிக்கை உள்ளடங்கலாக சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் எடுக்கப்படலாகும் நடவடிக்கைக்கு ஊறு பயக்காதவாறு எடுக்கப்படும் நடவடிக்கை ஆகும்.<br>(3) xxx<br>(4) xxx<br>(5) xxx |

<table>
<tr><th>வ. எண்.</th><th>இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி</th><th>திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி</th></tr>
<tr><td>10</td><td>
பின் இணைப்பு 1
1. மின் விற்பனையாளர், மின் விலைக்குவாங்குபவர் ஆகியோர்களுக்கான விலக்கக் கட்டணங்கள் மற்றும் பிற நிபந்தனைகள்:
இந்த ஒழுங்குமுறைவிதிகளின் 10 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (A) உள் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப் பட்டுள்ளவாறு மாநில உறுப்பமைவுகளான மின் விலைக்குவாங்குபவரின் அனைத்து காலத் தொகுதிக்குமான மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் மிகை மின் உட்செலுத்தலுக்கான விலக்கக் கட்டணங்கள் கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் மின் விலைக்குவாங்குபவரின் குறைவான மின் உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் மிகை மின் உட்செலுத்தலுக்கான விலக்கங்களுக்கான கட்டணங்கள் பெறப்படுதல் வேண்டும் மற்றும் அவை 2014 ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய விலக்கத்திர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் அதனுடைய திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு விலக்கக் கட்டணங்களுக்கான நெறிய விலையினை கருத்திற்கொண்டு ஒரு காலத் தொகுதியின் சராசரி அலைவெண்ணின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு கணக்கிடப்படுதல் வேண்டும்.
<table>
<tr><th colspan="2">காலத் தொகுதிக்கான சராசரி அலைவெண் (மின்னதிர்வுகள்)</th><th>விலக்கத்திற்கான கட்டணங்கள்</th></tr>
<tr><th>குறைவாக</th><th>குறைவில்லாத</th><th>(பைசா/கிலோ வாட் மணி)</th></tr>
<tr><td></td><td>50.05</td><td>0.00</td></tr>
<tr><td>50.05</td><td>50.04</td><td rowspan="4">50.05 மின்னதிர்வுகளுக்கு குறையாத நிலையின் மதிப்பளவு மற்றும் 50.00 மின்னதிர்வு நிலையில் அடையாளம் காணப்பட்ட மதிப்பளவோடு இணைத்து மற்றும் இந்த ஒழுங்குமுறை விதியின்கீழ் கண்டுள்ள குறிப்பின்கீழ் விவரித்தவாறு சரிவு நிர்ணயிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>50.04</td><td>50.03</td></tr>
<tr><td>50.03</td><td>50.02</td></tr>
<tr><td>50.02</td><td>50.01</td></tr>
<tr><td>50.01</td><td>50.00</td><td>மின்பரிமாற்ற பிரிவின் ஒரு நாளைக்கு முந்திய சந்தையில் கண்டறியப்பட்ட பகுதிக்கான தினசரி சராசரி (தனி) தீர்வு மதிப்பு</td></tr>
<tr><td>50.00</td><td>49.99</td><td></td></tr>
<tr><td>49.99</td><td>49.98</td><td rowspan="6">50.00 மின்னதிர்வில் அடையாளம் காணப்பட்ட மதிப்பினை 49.85 மின்னதிர்வுக்கு குறைவான நிலையின் மதிப்பினோடு இணைத்து மற்றும் இந்த ஒழுங்குமுறை விதியின்கீழ் கண்டுள்ள குறிப்பின்கீழ் விவரித்தவாறு சரிவு நிர்ணயிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>49.98</td><td>49.97</td></tr>
<tr><td>49.97</td><td>49.96</td></tr>
<tr><td>49.96</td><td>49.95</td></tr>
<tr><td>49.95</td><td>49.94</td></tr>
<tr><td>49.94</td><td>49.93</td></tr>
</table>
</td><td>
பின் இணைப்பு 1
1. மின் விற்பனையாளர், மின். விலைக்குவாங்குபவர் ஆகியோர்களுக்கான விலக்கக் கட்டணங்கள் மற்றும் பிற நிபந்தனைகள்:
1) இந்த ஒழுங்குமுறைவிதிகளின் 10 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (A) உள் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப் பட்டுள்ளவாறு, மாநில உறுப்பமைவுகளான மின் விலைக்குவாங்குபவரின். அனைத்து காலத் தொகுதிக்குமான மிகை மின் உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் மிகை மின் உட்செலுத்தலுக்கான விலக்கக் கட்டணங்கள் கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் மின் விலைக்குவாங்குபவரின் குறைவான மின் உள்ளிழுப்பு மற்றும் மின் விற்பனையாளரின் மிகை மின் உட்செலுத்தலுக்கான விலக்கங்களுக்கான கட்டணங்கள் பெறப்படுதல் வேண்டும் மற்றும் விலக்கக் கட்டணங்களுக்கான நெறிய விலையினை கருத்திற்கொண்டு ஒரு காலத் தொகுதியின்சராசரி அலைவெண்ணின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு கணக்கிடப்படுதல் வேண்டும்.
<table>
<tr><th colspan="2">காலத் தொகுதிக்கான சராசரி அலைவெண் (மின்னதிர்வுகள்)</th><th>விலக்கத்திற்கான கட்டணங்கள்</th></tr>
<tr><th>குறைவாக</th><th>குறைவில்லாத</th><th>(பைசா/கிலோ வாட் மணி)</th></tr>
<tr><td></td><td>50.05</td><td>0.00</td></tr>
<tr><td>50.05</td><td>50.04</td><td rowspan="4">50.05 மின்னதிர்வுகளுக்கு குறைவில்லாத நிலையின் மதிப்பளவு மற்றும் 50.00 மின்னதிர்வு நிலையில் அடையாளம் காணப்பட்ட மதிப்பளவோடு இணைத்து மற்றும் இந்த ஒழுங்குமுறை விதியின்கீழ் கண்டுள்ள குறிப்பின்கீழ் விவரித்தவாறு சரிவு நிர்ணயிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>50.04</td><td>50.03</td></tr>
<tr><td>50.03</td><td>50.02</td></tr>
<tr><td>50.02</td><td>50.01</td></tr>
<tr><td>50.01</td><td>50.00</td><td>இதில் P என்பது ஒரு நாளைக்கு முந்திய அனைத்து சந்தைகளின் மின் பரிமாற்ற பிரிவில் ஒரு யூனிட் க்கு பைசாவில் கண்டறியப்பட்ட பகுதிக்கான எடையிடப்பட்ட சராசரி கூட்டு தீர்வு செய்யப்பட்ட மதிப்பு</td></tr>
<tr><td>50.00</td><td>49.99</td><td></td></tr>
<tr><td>49.99</td><td>49.98</td><td rowspan="6">50.00 மின்னதிர்வில் அடையாளம் காணப்பட்ட மதிப்பினை 49.90 மின்னதிர்வுக்கு குறைவான நிலையின் மதிப்பினோடு இணைத்து மற்றும் இந்த ஒழுங்குமுறை விதியின்கீழ் கண்டுள்ள குறிப்பின்கீழ் விவரித்தவாறு சரிவு நிர்ணயிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>49.98</td><td>49.97</td></tr>
<tr><td>49.97</td><td>49.96</td></tr>
<tr><td>49.96</td><td>49.95</td></tr>
<tr><td>49.95</td><td>49.94</td></tr>
<tr><td>49.94</td><td>49.93</td></tr>
</table>
</td></tr>
</table>

| *வ. எண்.* | *இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி* | *திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி* |
|---|---|---|
| | காலத் தொகுதிக்கான சராசரி அலைவெண் (மின்னதிர்வுகள்) — விலக்கத்திற்கான கட்டணங்கள்<br>குறைவாக — குறைவில்லாத — (பைசா/கிலோ வாட் மணி)<br>49.93 — 49.92<br>49.92 — 49.91<br>49.91 — 49.90<br>49.90 — 49.89<br>49.89 — 49.88<br>49.88 — 49.87<br>49.87 — 49.86<br>49.86 — 49.85<br>800.00<br>49.85<br>குறிப்பு:—<br>i முதல் v வரை xxx<br>vi. ஆணையத்தால் மின் கட்டணவீதம் நிர்ணயிக்கப்படும் மின் உற்பத்தி நிலையங்களுக்கான விலக்கத்திற்கான கட்டணங்களின் மேல்வரம்பு விலை வீதமானது முந்திய மாதத்தில் பட்டியலிடப்பட்ட அதனுடைய மின் சக்தி கட்டணங்களுக்கு சமமாக இருத்தல் வேண்டும்.<br>வரம்புரையாக, பிந்திய நாளில் மின் சக்தி கட்டணங்கள் திருத்தியமைக்கப்படுமானால் முன்தேதியிட்டு விலக்கத்தீர்வு அமைப்புமுறை கணக்கினை திருத்தியமைத்தல் அனுமதிக்கப்படாதிருத்தல் வேண்டும்.<br>vii முதல் x வரை . xxx | காலத் தொகுதிக்கான சராசரி அலைவெண் (மின்னதிர்வுகள்) — விலக்கத்திற்கான கட்டணங்கள்<br>குறைவாக — குறைவில்லாத — (பைசா/கிலோ வாட் மணி)<br>49.93 — 49.92<br>49.92 — 49.91<br>49.91 — 49.90<br>49.90<br>1000.00<br>குறிப்பு:—<br>i முதல் v வரை xxx<br>vi. நீக்கப்பட்டது.<br>vii முதல் x வரை . xxx |
| 11 | **பின் இணைப்பு II: கூடுதல் விலக்கக் கட்டணங்கள்**<br>அட்டவணை – I கூடுதல் விலக்கக் கட்டணம் (மின் விற்பனையாளர் /மின் விலைக்கு வாங்குபவருக்கானது)<br>(A) xxx<br>(B) xxx<br>அட்டவனை II : நிலக்கரி அல்லது பழுப்பு நிலக்கரி அல்லது நிருவகிக்கப்பட்ட விலை அமைப்புமுறையின்கிழ் வழங்கப்படும். எரிவாயுவைப் பயன்படுத்தும் ஆணையத்தால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களின் குறைவான உட்செலுத்தலுக்கான கூடுதல் விலக்கக் கட்டணம்<br>(A) xxx<br>(B) xxx | **பின் இணைப்பு II: கூடுதல் விலக்கக் கட்டணங்கள்**<br>அட்டவணை – I கூடுதல் விலக்கக் கட்டணம் (மின் விற்பனையாளர் /மின் விலைக்கு வாங்குபவருக்கானது)<br>(A) xxx<br>(B) xxx<br>நீக்கப்பட்டது |

<table>
<tr><th>வ. எண்.</th><th>இருந்துவரும் ஒழுங்குமுறைவிதி</th><th>திருத்தப்பட்டவாறு ஒழுங்குமுறைவிதி</th></tr>
<tr>
<td>12</td>
<td>
பின் இணைப்பு – III<br>
2014 ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய விலக்கத்தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறைவிதியின் மற்றும் 3.1 ஆம் கூறின்கீழ் அதனுடைய திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலக்கத்தீர்வு அமைப்புமுறை நெறிய விலைக்கான எடுத்துக்காட்டு
<table>
<tr><th colspan="2">காலத் தொகுதியின் சராசரி அலைவெண் (மின்னதிர்வுகள்)</th><th>விலக்கத்திற்கான கட்டணங்கள்</th></tr>
<tr><th>குறைவாக</th><th>குறைவில்லாத</th><th>(பைசா/கிலோ வாட் மணி)</th></tr>
<tr><td></td><td>50.05</td><td>0.00</td></tr>
<tr><td>50.05</td><td>50.04</td><td>1 x P/5</td></tr>
<tr><td>50.04</td><td>50.03</td><td>2 x P/5</td></tr>
<tr><td>50.03</td><td>50.02</td><td>3 x P/5</td></tr>
<tr><td>50.02</td><td>50.01</td><td>4 x P/5</td></tr>
<tr><td>50.01</td><td>50.00</td><td>P</td></tr>
<tr><td>50.00</td><td>49.99</td><td>50.00+15xP/16</td></tr>
<tr><td>49.99</td><td>49.98</td><td>100.00+14xP/16</td></tr>
<tr><td>49.98</td><td>49.97</td><td>150.00+13xP/16</td></tr>
<tr><td>49.97</td><td>49.96</td><td>200.00+12xP/16</td></tr>
<tr><td>49.96</td><td>49.95</td><td>250.00+11xP/16</td></tr>
<tr><td>49.95</td><td>49.94</td><td>300.00+10xP/16</td></tr>
<tr><td>49.94</td><td>49.93</td><td>350.00+9xP/16</td></tr>
<tr><td>49.93</td><td>49.92</td><td>400.00+8xP/16</td></tr>
<tr><td>49.92</td><td>49.91</td><td>450.00+7xP/16</td></tr>
<tr><td>49.91</td><td>49.90</td><td>500.00+6xP/16</td></tr>
<tr><td>49.90</td><td>49.89</td><td>550.00+5xP/16</td></tr>
<tr><td>49.89</td><td>49.88</td><td>600.00+4xP/16</td></tr>
<tr><td>49.88</td><td>49.87</td><td>650.00+3xP/16</td></tr>
<tr><td>49.87</td><td>49.86</td><td>700.00+2xP/16</td></tr>
<tr><td>49.86</td><td>49.85</td><td>750.00+1xP/16</td></tr>
<tr><td>49.85</td><td></td><td>800.00</td></tr>
</table>
இதில் P என்பது ஒரு நாளைக்கு முந்திய சந்தை மின் பரிமாற்ற பிரிவில் கிலோவாட் மணி ஒன்றுக்கு பைசா அளவில் கண்டறியப்பட்ட பகுதிக்கான தினசரி தீர்வு செய்யப்பட்ட மதிப்பு.
</td>
<td>
பின் இணைப்பு – III<br>
விலக்கத்தீர்வு அமைப்புமுறை நெறிய விலைக்கான எடுத்துக்காட்டு
<table>
<tr><th colspan="2">காலத் தொகுதியின் சராசரி அலைவெண் (மின்னதிர்வுகள்)</th><th>விலக்கத்திற்கான கட்டணங்கள்</th></tr>
<tr><th>குறைவாக</th><th>குறைவில்லாத</th><th>(பைசா/கிலோ வாட் மணி)</th></tr>
<tr><td></td><td>50.05</td><td>0.00</td></tr>
<tr><td>50.05</td><td>50.04</td><td>1 xP/5</td></tr>
<tr><td>50.04</td><td>50.03</td><td>2 xP/5</td></tr>
<tr><td>50.03</td><td>50.02</td><td>3 xP/5</td></tr>
<tr><td>50.02</td><td>50.01</td><td>4 xP/5</td></tr>
<tr><td>50.01</td><td>50.00</td><td>P</td></tr>
<tr><td>50.00</td><td>49.99</td><td>90.909 + 10 XP/11</td></tr>
<tr><td>49.99</td><td>49.98</td><td>181.818 + 9 XP/11</td></tr>
<tr><td>49.98</td><td>49.97</td><td>272.727 + 8 XP/11</td></tr>
<tr><td>49.97</td><td>49.96</td><td>363.636 + 7 XP/11</td></tr>
<tr><td>49.96</td><td>49.95</td><td>454.545 + 6 XP/11</td></tr>
<tr><td>49.95</td><td>49.94</td><td>545.454 + 5 XP/11</td></tr>
<tr><td>49.94</td><td>49.93</td><td>636.363 + 4 XP/11</td></tr>
<tr><td>49.93</td><td>49.92</td><td>727.272 + 3 XP/11</td></tr>
<tr><td>49.92</td><td>49.91</td><td>818.181 + 2 XP/11</td></tr>
<tr><td>49.91</td><td>49.90</td><td>909.090 + 1 XP/11</td></tr>
<tr><td>49.90</td><td></td><td>1000.00</td></tr>
</table>
இதில் P என்பது ஒரு நாளைக்கு முந்திய அனைத்து சந்தைகளின் மின் பரிமாற்ற பிரிவில் ஒரு யூனிட் க்கு பைசாவில் கண்டறியப்பட்ட பகுதிக்கான எடையிடப்பட்ட சராசரி கூட்டு தீர்வு செய்யப்பட்ட மதிப்பு
</td>
</tr>
</table>

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவின்படி)

சென்னை–600 032,
2025 செப்டம்பர் **16.**

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU